Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை: ரூபா 7.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2035 ஆனி 04 ஆம் நாள், ஹிஜ்ரி 1427 ர.ஆசிர் 29 (18.06.2004) வெள்ளிக்கிழமை இதழ் :260

புதுப்பொலிவுடன் திருநெல்வேலியில்
WESTERN UNION பணப் பரிமாற்றம்
●விரைவானது ●பாதுகாப்பானது ●நம்பகமானது
இப்பொழுது உலகின் எப்பாகத்திலிருந்தும் மிக துரிதமாக பணத்தினை பெற்றுக்கொள்வதற்கு
☞ பணம் பெறுவதற்கு வங்கிக்குப் போகத்தேவையில்லை
☞ வங்கிக் கணக்கு அவசியமில்லை
☞ நீடிக்கப்பட்ட சேவை நேரம்
☞ 365 நாள் சேவை
☞ 10 (MTCN) இலக்கங்களைப் பெற்றவுடன் எம்மை நாடவும்
THIRUMURUGAN COM.NET
T.P: 021-222 7310
021-222 7555
021-222 7560
Fax: 021-222 7310
E-mail: thirumurugan@eudoramail.com
46, ஆடியபாதம் வீதி, (ப.நோ.கூ.ச. முன்பாக) திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

# அரச எதிர்ப்புக் கண்டனப் பேரணியில் ஒரு லட்சம் மக்கள் அணிதிரண்டனர்!

(யாழ்ப்பாணம்)

**தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக அரசாங்கமும், ஜனாதிபதி சந்திரிகாவும் அசமந்தப்போக்கைக் காட்டிவருவதாக குற்றம்சாட்டி - சுமார் ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்ட யாழ்.குடாநாட்டு மக்கள் நேற்று மாபெரும் கண்டனப் பேரணியை நடத்தினர். நேற்றுக்காலை நல்லூர் கந்த சுவாமி கோவில் ஆலய முன்றலில் ஆரம்பித்த கண்டனப் பேரணி யாழ்.அரச செயலகம் வரை இடம்பெற்றது.**

தமிழ்மக்களின் ஏகபிரதிநிதிகளான தமிழீழ விடுதலைப் புலிகளிடம் வட - கிழக்கிற்கான இடைக்கால தன்னாட்சி அதிகாரசபையை உடன்வழங்கல் வேண்டும்.

இயல்பு வாழ்க்கைக்கு தடையாக உள்ள காரணிகளை அகற்றி உரிய சூழலைத் தோற்றுவித்தல் வேண்டும்.

அரச உதவியுடன் கிழக்கில் நடைபெறும் தமிழ்த்தேசியப் பற்றாளர்களின் மீதான படுகொலைகளை நிறுத்துதல் வேண்டும்.

மலையக தமிழ்மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள அரச பயங்கரவாதத்தை நிறுத்துதல் வேண்டும்.

நல்லூர் கந்தன் ஆலய முன்றலில் இருந்து நேற்று அதிகாலை 10.40 மணியளவில் ஆரம்பமான இந்த மாபெரும் கண்டனப் பேரணியில் நாடாளுமன்ற உறுப்பினர்கள், மத குருமார் தேசிய எழுச்சிப் பேரவை உறுப்பினர்கள், ஆசிரியர்கள், அரச அரச சார்பற்ற நிறுவனங்களில் பணிபுரியும் ஊழியர்கள், மாண

(12 ஆம் பக்கம் பார்க்க)




# அரசாங்கத்தைக் கண்டித்து பேரணியில் பல கோஷங்கள்!

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நேற்று நடைபெற்ற கண்டனப் பேரணியில் அரசாங்கத்தின் நிலைப்பாடுகளைக் கண்டித்து பல்வேறு கோசங்கள் எழுப்பப்பட்டன. அத்தோடு பல சுலோக அட்டைகளும் எடுத்துச் செல்லப்பட்டன.

அங்கு எழுப்பப்பட்ட கோசங்களும், எடுத்துச் செல்லப்பட்ட சுலோக அட்டைகளிலும் தெரிவிக்கப்பட்டவை வருமாறு -

* மலையகத் தமிழ் மக்களின் வாழ்க்கையை, வாழ்விடத்தை அழிக்காதே.

* பேச்சுவார்த்தையை உடன் ஆரம்பித்து தமிழ்மக்களுக்கு உரிமை கொடு.

* அகிம்சை பேச ஆயுதம் எடுத்தாய், ஆயுதம் பேச அகிம்சை என்றாய். இப்போ என்ன பேசப்போகிறாய்.

* கூரை ஏறி கோழி பிடிக்க முடியாத சந்திரிகாவே வானமேறி சமாதானமா தேடுகிறாய்.

* இயல்பு வாழ்க்கை, மீள்குடியமர்வு உடன் தமிழர்க்குத் தேவை.

* ஊடகவியலாளரைக் கொல்லாதே.

* நிரந்தர சமாதானத்திற்கு புலிகளின் முன்மொழிவே சிறந்த வழி.

* இனவெறி சிங்கள அரசே மலையக இனவெறிப் படுகொலைகளை உடன்நிறுத்து.

* எங்கள் தலைவன் பிரபாகரனே.

* தமிழ்மக்களின் ஏகபிரதிநிதிகள் தமிழீழ விடுதலைப் புலிகளே.

* நாட்டுப் பற்றாளரைக் கொல்லாதே.

# கொழும்பு நகர பாதுகாப்பு மோசமடைந்து விட்டதாம்!

(கொழும்பு)

கொழும்பு நகரின் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலவீனமடைந்திருப்பதாக ஐக்கிய தேசியக் கட்சி குற்றம் சாட்டியிருக்கின்றது.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் ஐக்கியதேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான ராஜித சேனாரட்ன இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்தார்.

இந்த மாநாட்டில் கருத்து வெளியிட்ட அவா-

இன்று கொழும்பு நகரின் பாதுகாப்பு மிகவும் மோசமான நிலையை அடைந்திருக்கின்றது. கொழும்பு நக

## ஐ.தே.க குற்றச்சாட்டு

ரின் இந்த பாதுகாப்புச் சீரழிவால் மோசமான விளைவுகள் ஏற்படும் என்று சகல அரச புலனாய்வுத்துறை அமைப்புக்களும் அறிக்கை சமர்ப்பித்துள்ளன.

இவ்வாறு கொழும்பு நகரின் பாதுகாப்பு பலவீனமடைந்து செல்வதால் நாட்டின் பொருளாதாரம் வீழ்சியடைந்து செல்வதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை இது தொடர்பாகக் கருத்து வெளியிட்ட பொலிஸ்மா அதி

(12 ஆம் பக்கம் பார்க்க)

# யோசனைகளை ஏற்காவிட்டால் கண்காணிப்புக்கு வரமாட்டோம்!

## ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதி அறிவிப்பு

(கொழும்பு)

# சமாதான முயற்சி குறித்து விளக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* நாட்டுப் பற்றாளரைக் கொல் லாதே.

காப்பு மிகவும் மோசமான நிலையை அடைந்திருக்கின்றது. கொழும்பு நக

கருத்து வெளியிட்ட பொலிஸ்மா அதி (12 ஆம் பக்கம் பார்க்க)

# கண்காணிப்புக்கு வரமாட்டோம்!

## ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதி அறிவிப்பு

(கொழும்பு)



தேர்தல் தொடர்பாக முன்வைக்கப்பட்ட யோசனைகளை நடைமுறைப்படுத்தாவிட்டால் ஐரோப்பிய ஒன்றியம் எதிர்காலத்தில் இலங்கையில் இடம்பெறும் தேர்தல்களைக் கண்காணிக்கும் நடவடிக்கையில் ஈடுபடாது என ஐரோப்பிய ஒன்றியத்தின் தேர்தல் கண்காணிப்புக் குழுவின் தலைவர் ஜோன்குஸ்நகன் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இந்தக் கருத்தை தெரிவித்தார்.

இந்த ஊடகவியலாளர் மாநாட்டில் கருத்துத் தெரிவித்த அவர்-

2000 ஆம் ஆண்டு இடம்பெற்ற பொதுத் தேர்தலின் பின்னர் மோசடிகளைத் தடுப்பதற்காக யோசனைகளை (12 ஆம் பக்கம் பார்க்க)

# சமாதான முயற்சி குறித்து விளக்க இந்தியா செல்கிறார் ஹெல்கிசன்!

(கொழும்பு)

இலங்கையில் அரசாங்கத்திற்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் மேற்கொள்ளப்படும் சமாதான முயற்சிகள் குறித்து இந்தியாவின் புதிய அரசாங்கத்திற்கு விளக்கமளிப்பதற்காக நோர்வேயின் பிரதியமைச்சர் விதார் ஹெல்கிசன் நாளை புதுடெல்லி செல்லவுள்ளார்.

புதுடெல்லி செல்லும் விதார் ஹெல்கிசன் இந்தியாவின் புதிய பிரதமர் மன்மோகன் சிங், காங்கிரஸ் கட்சித் தலைவி சோனியா காந்தி உள்ளிட்ட தலைவர்களைச் சந்தித்து பேச்சு நடத்தத் திட்டமிட்டுள்ளார்.

இந்தச் சந்திப்பின் போது விடுதலைப்புலிகளுக்கும் இலங்கை அரசுக்கும் இடையிலான சமாதான முயற்சிகள் குறித்தும், சமாதான முயற்சிகளின் தற்போதைய நிலை குறித்தும் புதிய இந்திய அரசுக்கு விதார் ஹெல்கிசன் எடுத்து விளக்குவார்.

ஒஸ்லோவிலிருந்து புதுடெல்கி செல்லும் விதார் ஹெல்கிசனுடன் இணைந்து கொள்வதற்காக இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிறட்ஸ்கரும் புதுடெல்கி செல்லவுள்ளார். இதேவேளை நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் நேற்று விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கத்தை லண்டனில் சந்தித்துப் பேச்சுக்கள் நடத்தினார்.

சமாதான முயற்சிகள் குறித்தே இந்தச் சந்திப்பில் இருவரும் ஆராய்ந்ததாக தெரிவிக்கப்படுகிறது. (01)

# பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ இந்தியா செல்லவுள்ளார்!

(கொழும்பு)

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அடுத்த மாதம் இந்தியாவிற்கு செல்லவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இவ்வாறு செல்லவுள்ள பிரதமர் இந்தியத் தலைவர்களுடன் இருநாட்டு உறவுகள் குறித்து உயர்மட்டக் கலந்துரையாடல்களை நடத்தவுள்ளார்.

எதிர்வரும் மாகாண சபைத் தேர்தல் நடந்து முடிந்த பின்னரே பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ இந்தியாவிற்கு பயணமாகவுள்ளதாக பிரதமரின் அலுவலகப் பேச்சாளர் தெரிவித்தார்.

பிரதமர் பதவியேற்றபின் மஹிந்த ராஜபக்ஷ மேற்கொள்ளும் முதலாவது வெளிநாட்டு விஜயம் இதுவென்பது குறிப்பிடத்தக்கது.

இந்தியாவில் தங்கியிருக்கும் காலப் (12 ஆம் பக்கம் பார்க்க)

## 18 வருடங்களின் பின்னர்

# சுவிஸில் இருந்து திரும்பிய இளைஞர் மின்சாரம் தாக்கியதில் பரிதாப மரணம்!

(நயினாதீவு)

18 வருடங்களின் பின்னர் சுவிஸ் நாட்டில் இருந்து வந்த இளைஞர் ஒருவர் மின்சாரம் தாக்கிப் பரிதாபகரமாக மரணமானார்.

இந்தச் சம்பவம் நேற்று நயினாதீவு 5 ஆம் வட்டாரத்தில் இடம்பெற்றது. இந்தச் சம்பவத்தின் போது 33 வயதான நடராசா அருட்செல்வன் என்பவரே மரணமடைந்தவராவார்.

மேற்படி சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது-

வீட்டில் தனது பிள்ளையின் பிறந்த தினத்தினை கொண்டாடுவதற்காக மின்சார விளக்கு ஒன்றுக்கு மின்சார இணைப்பை நெஞ்சுடன் அணைத்து வைத்துக் கொண்டு கொடுக்க முற்பட்ட வேளையே மின்சாரத்தால் தாக்கப்பட்டார். இதனால் அவர் அந்த இடத்திலேயே பரிதாபகரமாக உயிரிழந்தார்.

இவர் மூன்று தினங்களுக்கு முன்னர் தான் சுவிஸ் நாட்டிலிருந்து வந்திருந்தார். 18 வருடங்களின் பின்னர் நயினாதீவு ஆலய உற்சவத்துக்காகவும் தனது பிள்ளையின் முதலாவது பிறந்த தினத்தை சொந்த இடத்தில் கொண்டாடுவதற்காகவுமே மேற்படி (12 ஆம் பக்கம் பார்க்க)

எக்ஸ்போ எயார்
வான்வெளியில் உங்கள் நண்பன்...
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021-2223891, 2226297, 077-2349999, 011-2372952-3, 011-2360290, 011-2360291
email: jaffna@expoavi.com, reservations@expoavi.com.
EXPOAIR
Your friend in the skies...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழீழ விடுதலைப் புலிகளிடம்

# இடைக்கால நிர்வாகம் வழங்குவதே இறுதித் தீர்வுக்கு வழிவகுக்கும்!

## பொது அமைப்புக்களின் ஒன்றியம் மகஜர்

(யாழ்ப்பாணம்)

**தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகளான தமிழீழ விடுதலைப் புலிகளிடம் இடைக்கால நிர்வாகசபையை வழங்குவதன் மூலமே தமிழ் மக்களின் பிரச்சினைக்கான இறுதித்தீர்வுக்கு வழிவகுக்கும் என யாழ்.மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியத்தால் நேற்றுக் கையளிக்கப்பட்ட மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

**யாழ்.மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நேற்று நடைபெற்ற மாபெரும் கண்டனப் பேரணியின் இறுதியில் வாசிக்கப்பட்டு, ஜனாதிபதி உட்பட உள்நாட்டு, வெளிநாட்டு முக்கியஸ்தரிடம் வழங்கப்பட்ட அந்த மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது-**

தமிழீழ விடுதலைப் புலிகளே எமது ஏகப்பிரதிநிதிகள் என்பதனையும், போரினால் சிதைந்துபோயுள்ள எமது மக்களின் பாரம்பரிய வாழ்விடமான இந்தத்தீவின் வடக்கு, கிழக்கு பிரதேசத்தினை மீளக்கட்டியெழுப்புவதற்கும், அங்கு இயல்பு வாழ்க்கையினை மீள ஏற்படுத்துவதற்கும், தமது சொந்த இடங்களிலிருந்து இடம் பெயர்ந்துள்ள மக்களை மீளக்குடியமர்த்துவதற்கும், வடக்கு கிழக்கின் இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபையினை விடுதலைப் புலிகளிடம் உடனடியாக ஒப்படைக்க வேண்டும் என்பதனையும், கடந்த பொதுத் தேர்தல் உள்ளிட்ட பல சந்தர்ப்பங்களில் நாம் அரசுக்கும், சர்வதேசத்துக்கும் வலியுறுத்தியுள்ளோம்.

தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கான தீர்வு தொடர்பாக புதிய அரசாங்கமும், ஜனாதிபதி சந்திரிகா அம்மையாரும் தெரிவித்துவரும் முன்னுக்குப் பின் முரணான கருததுக்களும், கிழக்கிலே தொடருகின்ற தமிழ்த் தேசியப்பற்றாளர்களின் படுகொலைகளும் மலையக மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள ஆயுதவன்முறைகளும், அடாவடித்தனங்களும் இக்கண்டனப் பேரணிக்கு காரணங்களாய் அமைந்துள்ளன.

இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை விடுதலைப் புலிகளிடம் ஒப்படைக்கப்பட வேண்டுமென நாம் மீண்டும் மீண்டும் வெளிப்படுத்தி வரும் கருத்துக்கு கிழக்கிலே அண்மைக்காலமாக இடம்பெற்றுவரும் சம்பவங்கள் வலுச்சேர்த்துள்ளன.

அங்கு நிலைகொண்டுள்ள இராணுவம் தனது கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில், தனது காவல் நிலைகளுக்கு அருகில் இடம்பெறுகின்ற படுகொலைகளைக்கூட தடுத்து நிறுத்தாது உள்ளமை, விடுதலைப் புலிகளின் நிர்வாகத்தில் மட்டுமே தமிழ மக்கள் சுதந்திரமாகவும், பாதுகாப்பாகவும் வாழமுடியும் என்ற உண்மையை எடுத்துக்காட்டுகிறது.

வரலாற்றுத் தனித்துவமுடைய, தமக்கென பாரம்பரியப் பிரதேசத்தினைக் கொண்ட தமிழ்த்தேசிய இனம்தமக்கான தலைமையினையும் தெளிவாக வெளிக்காட்டியுள்ளது. சுயநிர்ணய உரிமை கொண்ட நாம், சிங்களப் பேரினவாத அரசு இயந்திரத்திடம் எமது தலைவிதியை ஒப்படைத்துவிட்டு அடிமைகளாக வாழத் தயாரில்லை.

கடந்த 56 ஆண்டுகளாக மாறி மாறிப் பதவிக்கு வந்த அரசாங்கங்கள் காலத்துக்குக்காலம் ஒப்பந்தங்கள் என்ற பெயரில் எம்மை ஏமாற்றியமையே எமது பிரச்சினைகள் தொடர்பில் நாம் கண்ட வரலாறாகும்.

எமது வாழ்வியல் பொருளாதார உரிமைகளை அரசியல் கட்சிகள் தொடர்ச்சியாக நிராகரித்தே வந்துள்ளன. எமது பொருளாதார மையங்கள் எவ்வாறு படிப்படியாக மாற்றமடைந்தன என்பதையும் நாம் கண்டுள்ளோம்.

இத்தீவினுடைய தென் பிரதேசத்தில் ஒரு சிறிய, மக்கள் வாழும் கிராமம் ஒன்றிலாவது அம்மக்களை வெளியேற்றி இராணுவத் தினரால் வடக்கு - கிழக்கிலே அமைக்கப்பட்டது போன்ற இராணுவ வலயமொன்றினை ஏற்படுத்த முடியுமா? அவ்வாறு ஏற்படுத்தப் படின் அச்செயல் அரசாங்கத்தையே ஆட்டங்காண வைக்கும்.

ஆனால், அரசியல் அமைப்புக்கு உட்பட்ட வழிமுறைகளின் மூலம் அவ்வாறானதோர் வலுமிக்க ஆட்சேபத்தை தமிழ் மக்களால் தெரிவிக்க முடியாத வகையிலேயே இலங்கையின் பேரினவாத அரசியல் யாப்பும், நடைமுறைகளும் எமது பாரம்பரிய பிரதேசத்திலே எமது பிரதிநிதிகளான விடுதலைப் புலிகளிடம் ஒப்படைக்கப்படுகின்ற இடைக்கால தன்னாட்சி அதிகார சபையொன்றின் மூலமாக மட்டும் தான் நாம் எமது வளங்களை மீளவும் கட்டியெழுப்ப முடியும். இவ்வாறான சபை தொடர்பாக ஜே.வி.பியும், ஹெல உறுமயவும் முன்வைக்கும் விமர்சனங்கள் யாவும் போர் நிறுத்த உடன்பாட்டைச் சீர்குலைத்து - சமாதானச்சூழலை நலிவடையச் செய்து - தமது அரசியல் கட்சியை அரசியல் இலாபம் ஈட்டவைக்கும் குறுகிய நோக்கம் கொண்டவையேயாகும்.

தாம் மார்க்ஸிட்டுக்கள் எனத் தமது மார்பு தட்டிக்கொள்ளும் ஜே.வி.பியினர்,மார்க்ஸிட்டுக்களால் உருவாக்கப்பட்ட சுயநிர்ணயக் கோட்பாட்டினை நிராகரிப்பது அவர்களுடைய சந்தர்ப்பவாத அரசியலை வெளிச்சம்போட்டுக் காட்டுகிறது. இத்தகையோரின் கையில் பொம்மையாகத் தாங்கள் தொடர்ந்தும் செயற்பட்டால்,நாமும் பிரிந்து சென்று தமிழீழத் தனியரசு அமைப்பதற்கான வழிவகைகள் குறித்தே மீண்டும் தீவிர கவனம் செலுத்த வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுவோம்.

உயர்பாதுகாப்பு வலயத்தினால் 47க்கு மேற்பட்ட பாடசாலைகள் இயங்கமுடியாத நிலையிலுள்ளன. தெல்லிப்பளை பிரதேசத்தில் மாத்திரம் 31 பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன. 246க்கு அதிகமான ஆலயங்கள் இராணுவத்தின் ஆக்கிரமிப்புக்குள் அகப்பட்டுள்ளன. தெல்லிப்பளைப் பகுதியில் மட்டுமே பல ஆயிரம் மில்லியன் ரூபா பெறுமதியான பொருளாதார இழப்பீடு ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு கல்வி, பொருளாதாரம், உற்பத்தி, வேலைவாய்ப்பு என இயல்புவாழ்வு தமிழர்களுக்கு மறுக்கப்பட்டுள்ளது. உடன்படிக்கையின் படி எந்த மாறுதலையும் அரசு உருவாக்கவில்லை. மாறாக நெருக்கடி வரும்போது பிரதேசமொன்றின் ஒரு பகுதியிலிருந்து அப்பிரதேசத்தின் இன்னோர் பகுதிக்கு இராணுவம் நகர்ந்திருக்கிறதே அன்றி முழுமையாக எந்தப் பிரதேசத்தையும் விட்டு வாபஸ் பெறப்படவில்லை.

மீள்குடியமர்வுக்கான திட்டங்கள் எதனையும் அரசு மேற்கொள்ளவில்லை. பல ஆண்டுகளாக தமிழர்கள் தமது வாழ்விடங்களை இழந்து அலைகின்றனர். உயர் பாதுகாப்பு வலயத்தை அகற்றாத நிலை, நிலக்கண்ணிகளை முற்றாக அகழ்ந்தெடுக்காத சூழல், மக்கள் வாழ்விடங்களுக்கு அருகில் இராணுவ முகாம்களையும், காவலரண்களையும் அமைத்திருக்கின்ற நிலைமை என்பன மீள்குடியமர்வை முற்றாகத் தடுக்கின்றது.

பாதுகாப்பற்ற சூழலிலும் போதிய போக்குவரத்து வசதியின்மையாலும் மீள்குடியமர்வில் பாரிய சிக்கல்களைத் தமிழ் மக்கள் எதிர்கொள்வதுடன் இதனால் உருவாகியுள்ள சமூக பொருளாதார, அரசியல் பிரச்சினைகளையும் தீர்க்க முடியாது திணறுகின்றனர்.

சமாதானப் போர்வையில் படுகொலைகளைப் புரிவதன் மூலம் அரசு கிழக்கில் நிலவிய அமைதியான சூழலைக் குழப்பியுள்ளது. சமாதானத்தைச்சிதைக்க விரும்பும் சில சக்திகளையும் சில சுயநலன் விரும்பிகளையும் அவர்களது அடியாட்களையும் வைத்துக் கொண்டு கிழக்கில் படுகொலைகளை இலங்கை இராணுவத்தின் புலனாய்வுத்துறையினரே மேற் கொண்டு வருகின்றது. இது சமாதானத்திற்கு விடப்படும் சவாலாகும்.

இதனூடாக விடுதலைப்புலிகளைப் போருக்கு இழுக்கவும், அதன் மூலம் சமாதானத்தை சீரழித்த பழியை விடுதலைப்புலிகள் மேல் போடவும் அரசு திட்டமிடுகின்றது. தமிழீழ விடுதலைப்புலிப் போராளிகளையும் தமிழ்த் தேசியப்பற்றாளர்களையும் திட்டமிட்டுப் படுகொலை செய்து வருகின்றமை இராணுவத்தின் சமாதானத்தின் மீதான பற்றுறுதியின்மையையே காட்டுகின்றது. எனவே கிழக்கில் நிகழ்த்தி வரும் படுகொலைகளை அரசு நிறுத்த வேண்டும். அல்லது விடுதலைப்புலிகளிடம் வடக்கு கிழக்கை பூரணமாக ஒப்படைக்க வேண்டும்.

கிழக்கில் இஸ்லாமிய,தமிழ்ச் சமூகத்திடையே மோதல்களைத் தூண்டுகின்ற நடவடிக்கைகளை இலங்கை அரசு நிறுத்திக் கொள்ள வேண்டும்.

போர்நிறுத்த உடன்பாட்டின் பின்பும் சமாதானப் பேச்சுக்களின் பின்பும் இலங்கை அரசு தமிழ்,இஸ்லாமிய சமூகங்களைப் பிரித்தாளப் படுகொலைகளை மேற்கொண்டுள்ளது. இவற்றை இலங்கை அரசின் புலனாய்வுத்துறையினரே மேற்கொண்டு வந்தனர். இவற்றையும் இலங்கை அரசு முற்றாகக் கைவிட வேண்டும்.

பிராந்திய சர்வதேச ஆக்கிரமிப்பு சக்திகளை அழைத்துப் பயிற்சி பெறுவதையும் ஆலோசனை கேட்பதையும் இலங்கை அரசு நிறுத்திக்கொள்ள வேண்டும். இராணுவத்தைப் போருக்குத் தயார்படுத்துகின்ற பணியை முடுக்கிவிட்டுள்ள அரசு,சமாதான காலத்தை போருக்கான தயார்படுத்தலுக்கான காலமாக கொள்கின்றமையை இந்நடவடிக்கை உறுதிப்படுத்துகின்றது. இவ்வாறான செயற்பாடுகளை உடனடியாக இலங்கை அரசு நிறுத்த வேண்டும்.

மலையகத் தமிழர் மீது மிரட்டலையும்,அச்சுறுத்தலையும் மேற்கொண்டு வரும் இலங்கை படைத்துறைகளின் நடவடிக்கைகளும் நிறுத்தப்படவேண்டும். மலையகத் தமிழர்களைக் கைது செய்வது, சிறையிலடைப்பது, படுகொலை செய்வது என்பன அவர்கள் மீதான வன்முறையாகும். இவற்றை மலையக மக்களின் அடிப்படை உரிமை மீறும் செயல்களாகவே நோக்க வேண்டும். இவற்றை இலங்கை அரசு உடனடியாக நிறுத்த வேண்டும்.

எனவே இலங்கை அரசு போர் நிறுத்த உடன்பாட்டைப் பாதுகாத்து நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்த வேண்டுமாயின், வடக்கு கிழக்கின் இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபையை புலிகளிடம் ஒப்படைக்க வேண்டும். இதுவே தமிழர்களின் இயல்பு வாழ்வையும்,மீள்குடியமர்வையும் சாத்தியப்படுத்துவதுடன், வட-கிழக்கில் தமிழ் மக்களின் பாதுகாப்பையும், சுதந்திரமான வாழ்வையும் உறுதிப்படுத்தும்.

மேலும் இலங்கைத் தீவு முழுவதற்குமான அமைதி நிலைக்கும், பொருளாதார சுபீட்சத்துக்கும் தீவிலே வாழ்கின்ற சகல இனமக்களதும் பாதுகாப்புக்கும் வடக்கு - கிழக்கின் இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபையின் தோற்றம் வழிசமைக்கும்.

எனவே நாம் குறிப்பிட்ட விடயங்கள் தொடர்பாக ஐந்து அம்சக் கோரிக்கையை யாழ்.குடாநாட்டு மக்கள் ஓரணியில் ஒன்று திரண்டு நடாத்திய இப்பேரணி ஊடாக தங்கள் மேலான கவனத்திற்கு சமர்ப்பிக்கின்றோம்.

1. தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகளான தமிழீழ விடுலைப் புலிகளிடம் வட-கிழக்கிற்கான இடைக்கால தன்னாட்சி அதிகாரசபையை உடன் வழங்கல் வேண்டும்.

2. இயல்பு வாழ்க்கைக்கு தடையாக உள்ள காரணிகளை அகற்றி உரிய சூழலைத் தோற்றுவித்தல் வேண்டும்.

3. வட-கிழக்கு பகுதியிலுள்ள உயர்பாதுகாப்பு வலயங்களை அகற்றி புலம்பெயர்ந்து வாழும் மக்களைச் சொந்த இடங்களில் மீளக் குடியமர்த்தல் வேண்டும்.

4. அரச உதவியுடன் கிழக்கில் நடைபெறும் தமிழ்த் தேசியப் பற்றாளர்களின் மீதான படுகொலைகளை உடன் நிறுத்தல் வேண்டும்.

5. மலையகத் தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்துவிடப்பட்டுள்ள அரச பயங்கரவாதத்தை நிறுத்துதல் வேண்டும்.

இம்மகஜரின் பிரதிகள் இலங்கைப் பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர், அகதிகளுக்கான ஐ.நா வதிவிடப்பிரதிநிதி இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுத் தலைவர், மனித உரிமைகள் ஆணைக் குழுவின் பணிப்பாளர், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் வதிவிடப்பிரதிநிதி, இலங்கைக்கான அனைத்து வெளிநாட்டுத் தூதரக உயர் ஸ்தானிகர்கள் எனப் பலருக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.


## முக்கிய அறிவித்தல்

கடந்த 2004.06.13 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் அழகுக்கலை நிபுணர் திருமதி.பிரபாரெட்டியின் மாணவி நடாத்திய கலந்துரையாடலில் கலந்துகொண்ட மாணவர்களில் **தலை அலங்காரம் (Hair Style 50 க்கு மேற்பட்ட) மாலை கட்டுதல், நாகசடம்** செய்தல போன்ற பயிற்சிகளைப் பயில்வதற்கு பதிவுசெய்த மாணவர்களும், புதிதாக இவற்றைப் பயிலவிரும்பும் மாணவர்களும் எதிர்வரும் 2004.06.23 புதன்கிழமை காலை 9.00 மணிக்கு யாழ்ப்பாணம் கச்சேரிக்கு அருகாமையில் உள்ள **Y.M.C.A.** மண்டபத்துக்கு சமுகம் தருமாறு கேட்டுக்கொள்கிறோம். அத்துடன் 23.06.2004 க்கு முன்னர் உங்கள் பதிவுகளை கீழ்வரும் முகவரியில் பதிவுசெய்து கொள்ளவும்.

**T.K.ருறிஸ்ற் இன்**
*கந்தர்மடம் சந்தி,*
*இல.200, அரசடி வீதி,*
*யாழ்ப்பாணம்.*
தொலைபேசி இலக்கம்:- 021 222 5680
077 6209963

பதிவுக் கட்டணம் :- ரூபா 2000 மட்டுமே

அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

(சி-2670) நிர்வாகம்.

**திறைஞ்சனாஸ்** சங்கானை
விஜயகாந், தேவயாணி நடித்த
**வில்லரசு**
காட்சி நேரம் : 11.00. 2.45. 6.00.(பு.நே.)
வெள்ளி,சனி,ஞாயிறு இரவு 8.45 (பு.நே)
(சி-2621) General daughter

**ராஜா** யாழ்ப்பாணம்.
இன்று முதல்

விக்ரம், ஜோதிகா, வடிவேல் நடித்த
**அருள்**
(சி-2623)
காட்சிநேரம்:-10.30,2.30,6.30மட்டும்(பு.நே)

**நாகம்ஸ்** சுன்னாகம்
மாற்றியமைக்கப்பட்ட
டொல்பி ஒலி அமைப்புடன்
விஜய், திரிஷா, பிரகாஷ்ராஜ் நடித்த
**கில்லி** (கில்லி)

(சி-2622)
22 வரை மட்டும்
தினசரி காட்சிகள் : 11.00, 3.00, 7.00 (பு.நே)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரச கட்டுப்பாட்டுப் பகுதியில்
# புலிகளின் பொலிஸ் நிலையம்
# அரசாங்கம் மீது சந்தேகம்
## ஹெல உறுமய செயலாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

விடுதலைப்புலிகள் - சமாதானப் பேச்சுவார்த்தையின் பின்னால் மறைந்திருந்துகொண்டு, அவர்களது பொலிஸ் நிலையங்களை அரச கட்டுப்பாட்டுப் பகுதியில் அமைத்து வருவது குறித்து, அரசாங்கம் மௌனமாக இருப்பது, அரசு மீதான சந்தேகத்தை ஏற்படுத்துவதுடன், கவலையையும் அதிகரிக்கச் செய்திருப்பதாக கொழும்பு சிங்கள நாளிதழொன்றுக்கு வழங்கிய பேட்டியில் ஜாதிக ஹெல உறுமயவின் செயலாளரான உடுவே தம்மலோக தேரர் தெரிவித்தார்.

அந்தப் பேட்டியில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது -

தற்போதைய அரசு பதவிக்கு வந்ததே, தேசிய பாதுகாப்புக் குறித்து கடந்த ஐக்கிய தேசிய முன்னணியின் தலைமையிலான அரசு கொண்டு சென்ற திட்டங்கள் தொடர்பாகக் கடுமையான விமர்சனம் செய்ததனாலாகும்.

இந்த நிலையில், தேசிய பாதுகாப்புத் தொடர்பாக ஐக்கிய தேசிய முன்னணி தலைமையிலான அரசு விட்ட தவறினை நிவர்த்தி செய்து, நாட்டின் பாதுகாப்பைச் சரியான வழியில் முனனெடுப்பதாக உறுதி கூறிய அரசு - புலிகள் அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் தமது பொலிஸ் நிலை யங்களை நிறுவும்வரை பார்த்துக்கொண்டிருந்தது, பயங்கர மான நிலையைத் தோற்றுவித்தது.

சமாதானப் பேச்சுவார்ததையை மீள ஆரம்பிக்கும் பொருட்டு, காலத்தைக் கழித்துக்கொண்டிருக்கும் நிலையில் புலிகள் நாட்டின் தேசிய பாதுகாப்பினைக் கொடிய ஆபத்துக்குள்ளாக்கியுள்ளனர்.

இதுபோன்ற நிலைமையைச் சந்தித்தும், அரசும் அதன் பிரதான பங்காளிக் கட்சியான ஜே.வி.பியும் அமைதிக் கோட்பாட்டினைப் பின்பற்றுவதை ஹெல உறுமய கடுமையான விதத்தில் இழிவாகக் கருதுகின்றது.

நாட்டின் தேசிய பாதுகாப்புத் தொடர்பாக புலிகள் நினைத்த மாத்திரத்தில் விளையாடுவதற்கு அனுமதிப்பது குறித்து - ஜே.வி.பி., சிறிலங்கா சுதந்திரக்கட்சி உட்பட அரசு பொறுப்போடு செயற்படவேண்டுமெனவும் தேரர் மேலும் தெரிவித்தார்.

### சுவீடன் மாணவர் குழு சம்பூருக்கு விஜயம்

சுவீடன் நாட்டு மாணவர் குழுவினர் நேற்றுமுன்தினம் காலை புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசமான சம்பூர்ப்பகுதிக்குச் சென்று, அங்குள்ள புலிகளின் காவல்துறை அலுவலகம், நீதிமன்றம் ஆகியவற்றைப் பார்வையிட்டு, அந்தப் பிரதேச மக்களையும் சநதித்து கலந்துரையாடினர்.

இலங்கையின் சமாதான முயற்சிகள் தொடர்பாக ஆராய சுவீடன் மாணவர் குழுவினர் கொழும்பு வந்துள்ளனர். இவ்வாறு வந்தவர்களே சம்பூர்ப்பகுதிக்குச் சென்றவர்களாவர்.

இவர்கள் நேற்றுமுன்தினம் மாலையே திருகோணமலை நகரப்பகுதிக்கு சம்பூரிலிருந்து திரும்பியிருந்தனர். (10)

### புதிய இராணுவ அணி பயிற்சி முடித்து வெளியேறும்

(கொழும்பு)

புதிதாகப் பயிற்சிபெற்ற இராணுவ அணியொன்று, இந்த மாதம் 20 ஆம் திகதி பயிற்சி முடித்து வெளியேறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வவுனியாவில் கொக்குவெளி இராணுவ முகாமிலிருந்து பயிற்சி முடித்த இராணுவ அணியே வெளியேறவுள்ளதாகத். தெரிவிக்கப்படுகிறது.

இந்த அணியில் ஐநூறுக்கும் அதிகமான படையினர் அங்கம் வகிக்கவுள்ளதாக எதிர்பார்க்கப் படுகிறது.

### யோகாசனம் தொடர்பான திரைப்படக்காட்சி

ஆண்டி அப்பனின் யோகாசனம் தொடர்பான தமிழ்த் திரைபபடக் காட்சியொன்று நாளை சனிக்கிழமை காலை 6.30 மணிக்கு காண்பிக்கப் படவுள்ளது.

இந்த நிகழ்வில் யோகாசனம் முடித்த மாணவர்களும், யோகாசனப் பயிற்சிபெற்றுக் கொண்டிருக்கும் மாணவர்கள் மற்றும் ஆர்வமுள்ளவர்கள் அனைவரையும் கலந்துகொளளுமாறு அழைபபு விடுக்கப்பட்டுள்ளது.

# அடுத்த சில தினங்களில் டொலரின் பெறுமதி அதிகரிக்கும்

இலங்கையில் அடுத்த சில தினங்களில் டொலரின் பெறுமதி 105 ரூபாவுக்கும் 110 ருபாவுக்கும் இடையில் அதிகரிக்குமென, மத்திய வங்கியின் முன்னாள் தலைவர் பேராசிரியர் நெவில் கருணாதிலக தெரிவித்தார்.

இலங்கை மத்திய வங்கி நேற்றுமுன்தினம் வெளியிட்ட நாணய மற்றும் விகிதாசார பெறுமதியின்படி ஒரு டொலரின் விற்பனைப் பெறுமதி 101.08 ஆகவும், கொள்வனவு விலை 101.07 ஆகவும் அதிகரித்திருந்தது.

கடந்த சில நாட்களாக அமெரிக்க டொலரின் பெறுமதி அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வறுமை நிலையை ஒழித்தல் கொழும்பில் விசேட மகாநாடு

(கொழும்பு)

தெற்காசியப் பிராந்தியத்தில் நிலவும் வறுமையை ஒழித்தல் தொடர்பாக ஆராயும் விசேட மாநாடு கொழும்பில் இடம்பெறவுள்ளது.

இதில் சார்க் அமைப்பைச் சேர்ந்த நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்கள் பங்குபற்றவுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த மாநாட்டில் எடுக்கப்படும் தீர்மானங்கள் ஐந்து ஆண்டுத் திட்டமாக நடைமுறைப்படுத்தப்படவுள்ளன.

தெற்காசியப் பிராந்தியத்தில் நிலவும் வறுமை - இன்று பெரும் பிரச்சினையாக உருவெடுத்து வருவதனை சர்வதேச ரீதியில் வெளிப்படுத்தி, அதற்கான நிவாரணத்தைப் பெறுவதும் இந்தக் கூட்டத்தின் நோக்கமாகும்.

# நீக்கப்பட்ட இரு எம்.பிக்களையும் சேர்த்துக்கொள்ள முடியாது!

## சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தீர்மானம்

(கொழும்பு)

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் உறுப்புரிமையிலிருந்தும், பதவிகளிலிருந்தும் நீக்கப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான ரிஷாட் பதியுதீன், நஜீத் ஏ மஜீத ஆகியோரின் மீள்பரிசீலனை கோரிக்கைகளைச் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் அதியுயர்பீடம் நிராகரித்துள்ளது.

தங்களுக்கெதிரான தீர்மானத்தைக் கட்சியின் அரசியல் உயர்பீடம் மீள்பரிசீலனை செய்யவேணடுமென அவர்கள் கடிதம் மூலம் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இதனைக் கட்சியின் உயர் பீடம் நேற்றுமுன்தினம் ஆராய்ந்ததாக கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர்களான ரிஷாட் பதியுதீன், நஜீத் ஏ மஜீத் ஆகியோர் கட்சியின் ஒழுக்கக்கட்டுப்பாட்டை மீறியதுடன, கட்சிக்கெதிராகச் சதி செய்த குற்றங்கள் குறித்தும், அவர்களுக்கு குற்றப்பத்திரிகை சமர்ப்பிக்கப்பட்டது.

இதற்குப் பதிலளிப்பதற்கு அவர்களுக்கு அவகாசம் வழங்கப்பட்டபோதிலும், அதனை அவர்கள் பயன் படுத்தவில்லை.

எவ்வாறாயினும், கட்சியிலிருந்து நீக்கப்பட்ட இவர்கள் இருவரும் இனி சேர்த்துக்கொள்ளப்படமாட்டார்கள் எனவும் அவர் குறிப்பிட்டார்.

### சிங்கப்பூர் பிரதமர் கொழும்புக்கு விஜயம்

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் அழைப்பின் பேரில், சிங்கப்பூர் பிரதமர் கோ சொக் ரொங் அடுத்த சில தினங்களில் கொழும்புக்கு வரவுள்ளார்.

கொழும்புக்குச் சில தினங்களில் வரும் பிரதமர் - இங்கு தங்கியிருக்கும் காலப்பகுதியில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோருடன் கலந்துரையாடல்களையும் நடத்தவுள்ளார்.

இதன்பின்னர், அவர் கண்டி தலதா மாளிகைக்குச்சென்று வழிபாடு நடத்தவுள்ளார்.

# ஆறு அமைப்பாளர்களை ஐ.தே.க பதவி நீக்கம்

எதிர்வரும் மாகாணசபைத் தேர்தலில் வேறு கட்சியினர், சுயேட்சைக் குழுக்களில் போட்டியிடுவதற்கு, வேட்புமனுக்களைத் தாக்கல் செய்த ஆறு அமைப்பாளர்களை ஐக்கிய தேசியக் கட்சி பதவி நீக்கம் செய்துள்ளது.

இது தொடர்பாக, ஐ.தே.க பேச்சாளர் ஒருவர் தகவல் வெளியிடுகையில் -

ஐக்கிய தேசியக் கட்சியினர் நிறைவேற்றுக் குழுக்கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டது.

எதிர்வரும் மாகாணசபைத் தேர்தலில் வேறு அரசியல் குழுக்களைப் போட்டியிட வேட்புமனுக்களைத் தாக்கல் செய்ததற்காகவே ஆறு அமைப்பாளர்களும் கட்சியிலிருந்து நீககப்பட்டனர்.

இவர்களில், கொழும்பு மாநகர சபை உறுப்பினர்களும் அடங்குகின்றனர் என மேலும் தெரிவித்தார்.




நேற்று முன்தினம் யாழ். குடாநாட்டிற்கு விஜயம் செய்த அமெரிக்கத்தூதரக அதிகாரிகள் நொராட் நிறுவனத்திற்குச் சென் று அங்குள்ள அதிகாரிகளைச் சந்தித்தபோது எடுக்கப் பட்ட படம்.

## உலக அகதிகள் தினத்தை முன்னிட்டு யு.என்.எச்.சி.ஆர். நடத்தும் விளையாட்டு விழா

(யாழ்ப்பாணம்)

உலக அகதிகள் தினத்தை முன்னிட்டு யூ.என்.எச்.சி.ஆர். நடாத்தும் விளையாட்டு விழா, எதிவரும் 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு புங்கங்குளம் சந்திக்கு அண்மையிலுள்ள அரியாலை சனசமூக நிலைய விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இதில் ஆண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டிகள் காலை 9 மணியளவில் ஆரம்பமாகும். அதனைத் தொடர்ந்து சிறுவர்களுக்கும், பெண்களுக்குமான விளையாட்டு நிகழ்வுகள் ஆரம்பமாகி - மாலை ஒரு மணியளவில் பரிசளிப்புடன் அனைத்து நிகழ்வுகளும் முடிவடையும்.

# தன்னாட்சி அதிகாரசபையை அரசாங்கம் தாம்பாளத்தில் புலிகளுக்கு வழங்கவுள்ளதா?

## கேள்வி எழுப்புகிறார் தேரர்

(கொழும்பு)

இடைக்கால நிர்வாக அதிகாரசபையினை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தலைமையிலான அரசாங்கம் தாம்பாளத்தில் வைத்து விடுதலைப் புலிகளுக்கு வழங்க ஆயத்தமாகின்றதா என ஜாதிக ஹெல உறுமயவின் தலைவர் எல்லாவெல மெத்தானந்த தேரர் கேள்வியெழுப்பியுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது -

ஐக்கிய தேசிய முன்னணி தலைமையிலான அரசாங்கத்தினால் புலிகளிடம் அர்ப்பணிப்பு செய்யமுடியாமற்போன இடைக்கால நிர்வாக அதிகாரசபையினை, தற்போதைய அரசு தாம்பாளத்தில் வைத்து வழங்க ஆயத்தமாக இருப்பது ஜனாதிபதியின் அண்மைய உரையின் மூலம் உறுதியாகத் தெரிகின்றது.

அவ்வாறு இடைக்கால நிர்வாக சபையினை அரசாங்கம் வழங்கத் தயாராக இருக்குமானால், இனததின் காவலர்களான மகாசங்கத்தினர் உயிரைப் பணயம் வைத்தாவது அரசின் சதியினை தோற்கடிக்க வேண்டுமெனவும் அவர் குறிப்பிட்டார்.

# இரவுநேர ரயில் பிரயாணிகளிடம் சீருடையில் வந்தவர்கள் கைவரிசை

(கொழும்பு)

வவுனியாவிலிருந்து கொழுமபு-கோட்டைக்குச் சென்றுகொண்டிருந்த இரவு தபால் ரயிலில் பயணித்த, பிரயாணிகளிடம் பொலிஸ சீருடையில் வந்தவர்கள் பொல்காவலையில் வைத்து கொள்ளையடித்தனர்.

இந்தச் சம்பவம் கடந்த 14 ஆம் திகதி இடம்பெற்றது. இந்தக் கொள்ளைச் சம்பவத்தில் வவுனியா கதிரேசன் வீதியில் வசிக்கும் செலத்துரை மனோகரன், இ.கிளைநாதன், முகுந்தன் ஆகியவர்களே தமது பணம் மற்றும் நகைகளைப் பறி கொடுத்தவர்களாவர்.

பொலிஸ் சீருடையில் ரயிலில் ஏறிய சிலர் - இந்த மூன்று இளைஞர்களையும் விசாரணை செய்ய வேண்டுமெனத் தெரிவித்து, பொல்காவலை ரயில் நிலையத்தில் ரயிலிலிருந்து கீழிறக்கி அழைத்துச் செல் லப்பட்டனர்.

இவ்வாறு ரயிலிலிருந்து கீழிறங்கிய இவர்கள் - கீனவல எனுமிடததிலுள்ள சுடலை ஒன்றுககு அழைத்துச் செல்லப்பட்டனர்.

அங்கு இவர்களிடமிருந்து ரூபா 25,000 பணத்தையும், நகைகளையும் கொள்ளையடித்து பின் வாகனமொன்றில் பொலிஸ் சீருடையில் வந்தவர்கள் தப்பிச்சென்றனர்.

இது தொடர்பாக இந்த மூன்று [illegible] ளனர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஐரோப்பிய கிண்ண உதைபந்தாட்டம்

## சமநிலையில் முடிவடைந்த ஸ்பெயின் - கிரீஸ் ஆட்டம்!



ஐரோப்பிய கிண்ண உதைபந்தாட்டப் போட்டியில் 'ஏ' பிரிவில் கிரீஸ் - ஸ்பெயின் அணிகளுக்கு இடையே நேற்றுமுன்தினம் நடைபெற்ற இரண்டாவது லீக் ஆட்டம் சமநிலையில் முடிந்தது.

போர்த்துக்கலில் நடைபெற்று வரும் யூரோ - 2004 உதைபந்தாட்ட போட்டியின் 5 ஆம் நாளான நேற்று முன்தினம் கிரீஸ் அணி, ஸ்பெயின் அணியுடன் மோதியது.

பரபரப்பாக ஆரம்பமான ஸ்பெயின் - கிரீஸ் அணிகளுக்கு இடையேயான போட்டியின் முதல் பாதியில் ஸ்பெயினின் ஆதிக்கமே மிகுந்திருந்தது. ஸ்பெயின் அணியின் முன்னணி வீரர்களான ரால்கொன்சாலஸ், அல்பேல்டா, மோன்டியோரா பேர்னாண்டஸ் மற்றும் பயோல் ஆகியோர் துடிப்புடன் ஆடி, கிரீஸ் அணி வீரர்களை நெருக்கடிக்குள்ளாக்கினர்.

ஸ்பெயின் வீரர்களின் தொடர் தாக்குதல்களை கிரீஸ் அணியின் கோல் கீப்பர் அன்டோனிஸ் நிக்கோபோல்டிஸ் தொடர்ந்து முறியடித்துக் கொண்டேயிருந்தார். இருப்பினும் ஆட்டத்தின் 28 ஆவது நிமிடத்தில் ஸ்பெயின் வீரர் மோன்டியோரா பெர்னாண்டஸ், கிரீஸ் வீரர்கள் இருவரை. லாவகமாகக் கடந்து அற்புதமாக ஒரு கோல் அடித்து ஸ்பெயின் அணிக்கு 1-0 என்ற முன்னிலையை ஏற்படுத்திக் கொடுத்தார்.

அதற்குப் பிறகு ஸ்பெயின் வீரர்கள் தற்காப்பு பாணியை கடைப்பிடிக்க ஆரம்பித்தார்கள். ஸ்பெயின் வீரர்களின் அந்த அணுகுமுறையை பயன்படுத்திக் கொண்டு கிரீஸ் அணியின் வீரர்கள் ஆக்ரோஷமாக தாக்குதல் பாணியில் இறங்கினார்கள். என்றாலும் முதல் பாதியில் அவர்களால் கோல் எதுவும் போட முடியவில்லை.



இரண்டாம் பாதியிலும் கிரீஸ் வீரர்களது ஆதிக்கமே மேலோங்கியிருந்தது. ஸ்பெயின் வீரர்கள் பல முறை கிரீஸ் அணியின் பெனால்டி ஏரியாவிற்குள் பந்தை எடுத்துச் சென்று கோல் போட முயற்சித்தனர். ஆனால், கிரீஸ் வீரர்களின் நிதானமான, பதற்றமில்லாத ஆட்டத்திற்கு முன்னால் ஸ்பெயினின் முயற்சிகள் அனைத்தும் வீணாகிப்போயின.

ஆட்டத்தின் 63 ஆவது நிமிடத்தில் கிரீசின் அஞ்சலா சாரிஸ்டியாஸ், சக வீரர் டல்லாஸ் அனுப்பிய பந்தைப் பெற்றுக்கொண்டு ஸ்பெயின் கோல் கீப்பரை ஏமாற்றி வலைக்குள் பந்தைத் தள்ள, உற்சாகமாகக் கொண்டாடித் தீர்த்தார்கள் கிரீஸ ரசிகர்கள்.

இரு அணிகளும் தலா ஒரு கோல் போட்டு சமநிலையை எட்ட, அதற்குப் பிறகு முழு மூச்சுடன் ஸ்பெயின் வீரர்கள் கோல் அடித்து விட முயற்சித்தார்கள். ஆனாலும் கடைசிவரை பலன் ஏதும் கிட்டவில்லை. ஸ்பெயின் அணியின் பயிற்சியாளர் கடைசி 10 நிமிடங்களில் ஸ்பெயின் வீரர்கள் அனைவரையும் ஒன்றுசேர தாக்குதல் பாணியில் இறங்குமாறு பதற்றத்துடன் கேட்டுக் கொண்டேயிருந்தார். அவரது அணுகுமுறைக்கும் பலன் ஏதும் கிட்டவில்லை.

இறுதியில் இரு அணிகளுக்கும் இடையேயான ஆட்டம் 1-1 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிந்தது. இதனால் இந்த இரு அணிகளும் தலா ஒவ்வொரு புள்ளிகளைப் பெற்றன.

'ஏ' பிரிவில் முதலாவது லீக் போட்டியில் போர்த்துக்கல் அணியை கிரீஸ் வெற்றிகொண்டு 3 புள்ளிகளையும், ரஷ்ய அணியை வெற்றிகொண்ட ஸ்பெயின் அணி 3 புள்ளிகளையும் பெற்றிருந்தது.

இந்த இரு அணிகளும் பங்கு



கொண்ட போட்டி சம நிலையில் முடிந்ததால் இரு அணிகளும் தலா 4 புள்ளிகளுடன் 'ஏ' பிரிவில் முன்னணியில் இருப்பது குறிப்பிடத்தக்கது.

## இரண்டாவது லீக் போட்டியில் போர்த்துக்கல் அணி வெற்றி

'ஏ' பிரிவில் நடந்த இன்னொரு போட்டியில் போட்டியை நடத்தும் போர்த்துக்கலும் ரஷ்யாவும் மோதின.

இரண்டு அணிகளுமே முதல் ஆட்டத்தில் தோல்வி கண்டிருந்த



தால் இப்போட்டியை வெற்றிகொள்ள இரு அணிகளுமே பெரும் பாடுபட்டன.

போட்டியின் முக்கியத்துவம் கருதி இந்த இரண்டு அணி வீரர்களும் பொறுப்புடனும், அபாரமாகவும் விளையாடினர்.

போட்டி ஆரம்பித்த ஏழாவது நிமிடமே போர்த்துக்கல் வீரர் மணிச்சே கோல் ஒன்றை அடித்து தமது அணியை முன்னிலைக்குக் கொண்டு வந்தார்.

இரண்டாவது பாதி ஆட்டம் ஆரம்பித்த 47 ஆவது நிமிடத்தில் ரஷ்ய வீரர் ஓவ்கிளிக்கோவ் நடுவரால் சிவப்பு அட்டை காண்பிக்கப்பட்டு வெளியேற்றப்பட்டார்.

இதையடுத்து 88 ஆவது நிமிடத்தில் டுயி கோஸ்டா கோல் ஒன்றை அடித்து 2 - 0 என்ற முன்னிலையில் போர்த்துக்கல் அணியைக் கொண்டு வந்தார்.

சுமார் 58 ஆயிரம் ரசிகர்கள் பார்வையிட்ட இந்தப் போட்டியில் வெற்றிபெற்றதன்மூலம் போர்த்துக்கல் அணி நெருக்கடிக்குள் இருந்து ஓரளவு மீண்டுள்ளது.

'ஏ' பிரிவில் ஒரு போட்டியில் வென்றுள்ள போர்த்துக்கல் 4 புள்ளிகளுடன் இருககிறது. லீக் ஆட்டத்தில் அடுத்ததாக 20 ஆம் திகதி ஸ்பெயினை எதிர்கொள்ளும்.

இதில் போர்த்துக்கல் வெற்றி பெற்றால் மட்டுமே காலிறுதிப் போட்டிக்குள் நுழையமுடியும்.

ஏற்கனவே காலிறுதிக்குள் நுழைவதற்கான வாய்ப்பை இழந்துள்ள ரஷ்ய அணி கடைசி லீக் ஆட்டத்தில் 20 ஆம் திகதி கிரீஸ் அணியை எதிர்கொள்கிறது.

இப்போட்டியை சமன்செய்தாலே கிரீஸ் காலிறுதிக்குத் தகுதிபெறும். 'ஏ' பிரிவிலிருந்து காலிறுதிக்குத் தகுதிபெற கிரீஸ், ஸ்பெயின், போர்த்துக்கல் அணிகளிடையே கடும் போட்டி நிலவுகிறது. இதில் இரண்டு அணிகள் மட்டுமே கால் இறுதிக்குச் செல்லும்.




## அஃவுஸ்ரேலியப் பிரதமர் முரளிதரனுக்கு அழைப்பு!



இலங்கை கிரிக்கெட் அணி இந்த மாத இறுதியில் அவுஸ்ரேலியா சென்று விளையாடவுள்ளது. இந்தப் போட்டிக்கான இலங்கை அணியில் இடம்பெற்றிருந்த முரளிதரன் தனிப்பட்ட காரணத்திற்காக அவுஸ்ரேலியா செல்லவில்லை என்று அறிவித்துள்ளார்.

முரளிதரன் பந்துவீச்சை சமீபத்தில் அவுஸ்ரேலிய பிரதமர் ஜோன் ஹவாட் விமர்சித்திருந்ததைத் தொடர்ந்து அவர் இந்தப் புறக்கணிப்பு முடிவை எடுத்ததாகக் கூறப்படுகிறது.

இந்த நிலையில் அவுஸ்ரேலியப் பிரதமர் ஜோன் ஹவாட், சுழற்பந்து வீச்சாளர் ஷேன் வோர்ன் உட்படப் பலர் முரளிதரன் அவுஸ்ரேலியா வந்து விளையாடவேண்டும் என்று வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

## பயிற்சியாளர் பதவியிலிருந்து மியாண்டட் நீக்கப்பட்டார்!



பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் பயிற்சியாளர் ஜாவிட் மியாண்டட் நீக்கப்பட்டுள்ளதாக பாகிஸ்தான் கிரிக்கெட்சபை நேற்றுமுன்தினம் அறிவித்துள்ளது.

மியாண்டட்டுக்குப் பதிலாக இங்கிலாந்து முன்னாள் வீரரும், தென்னாபிரிக்க அணியின் முன்னாள் பயிற்சியாளருமான பொப் வூல்மர் புதிய பயிற்சியாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

ஆசியக் கிண்ணப் போட்டிக்கான பாகிஸ்தான் அணிக்கு பொப் வூல்மர் பயிற்சியாளராக இருப்பார்.

சமீபத்தில் நடந்த இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் மற்றும் ஒருநாள் தொடரில் பாகிஸ்தான் தோல்வியடைந்ததால் மியாண்டட் நீக்கப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

மியாண்டட் ஒப்பந்தத்திலிருந்து நீக்கப்பட்டு இருப்பதாகவும், பொப் வூல்மர் பயிற்சியாளராக பொறுப்பேற்கச் சம்மதித்து இருப்பதாகவும், பாகிஸ்தான் கிரிக்கெட் சபைத் தலைவர் சஹாரியார்கான் நேற்றுமுன்தினம் நிருபர்களிடம் அறிவித்தார்.

தேசிய கிரிக்கெட் ஆலோசகராக மியாண்டட்டை இருக்கும்படி கேட்டதற்கு அவர் மறுத்துவிட்டதாகவும் கூறினார். தனது பயிற்சி ஒப்பந்தம் அடுத்த ஆண்டு ஏப்ரல் மாதம் வரை இருக்கும் பட்சத்தில் இடையில் நீக்கியது ஏமாற்றம் அளிக்கிறது. இது ஒப்பந்த விதிமுறையை மீறும் செயல் என்று மியாண்டட் எதிர்ப்புத் தெரிவித்துள்ளார்.

## இங்கிலாந்துடனான டெஸ்ட் போட்டி; மேற்கிந்தியத் தீவுகள் அணி அறிவிப்பு

இங்கிலாந்து அணிக்கு எதிரான டெஸ்ட் தொடரில் ஆடவுள்ள 16 வீரர்கள் அடங்கிய மேற்கிந்தியத் தீவுகள் அணியை அந்த நாட்டு கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெட் அணி இங்கிலாந்தில் பயணம் மேற்கொண்டு அந்த அணிக்கு எதிராக 4 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் ஆடவுள்ளது. இரு அணிகளுக்கும் இடையேயான முதலாவது டெஸ்ட் போட்டி அடுத்த மாதம் 22 ஆம் திகதி லோர்ட்ஸ் மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது. அதற்கு முன்னதாக இந்த மாதம் இங்கிலாந்தில் ஆரம்பமாகவுள்ள நட்வெஸ்ட் முத்தரப்பு ஒருநாள் தொடரில் நியூஸிலாந்து, இங்கிலாந்து அணிகளுடன் மேற்கிந்தியத் தீவுகள் அணி மோதவுள்ளது.

டெஸ்ட் தொடருக்கா[illegible]ா மேற்கிந்தியத் தீவுகள் அணியை நேற்று முன்தினம் அந்த நாட்டு கிரிக்கெட் சபையின் தேர்வாளர்கள் அறிவித்தனர். அணியின் கப்டனாக பிரைன் லாராவே நீடிப்பார் என்று அந்த அறிவிப்பின் மூலம் தேர்வாளர்கள் உறுதி செய்துள்ளனர்.

அண்மையில் பங்களாதேஷ் அணிக்கு எதிராக இரண்டு போட்டிகள் கொண்ட தொடரில் ஆடியது மேற்கிந்தியத் தீவுகள் அணி. அந்தத் தொடரின் முதற் போட்டியில் சிறப்பாக ஆடியது பங்களாதேஷ் அணி. எனவே, அந்தப் போட்டி சமநிலையில் முடிவடைந்தது. அதையடுத்து ஜமேக்காவில் நடைபெற்ற இரண்டாவது டெஸ்ட் போட்டிக்கு முன்னதாக பிரைன் லாரா அதிரடியாக ஒரு அறிவிப்பை வெளியிட்டார்.

அந்தப் போட்டியில் மேற்கிந்தியத் தீவுகள் அணி வெல்லாவிட்டால் தனது கப்டன் பதவியை ராஜினாமாச் செய்யப் போவதாக அவர் சூளுரைத்தார். அந்தப் போட்டியில் மேற்கிந்தியத் தீவுகள் அணி இனிங்ஸ் மற்றும் 99 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வென்று பங்களாதேஷ் அணிக்கு எதிரான தொடரையும் கைப்பற்றியது.

[illegible] சிறப்பாக [illegible] ஆட்டமிழக்காமல் 261 ஓட்டங்களைக் குவித்து ஆட்டநாயகனாக தேர்வான சர்வான், இங்கிலாந்து அணிக்கு எதிரான டெஸ்ட் தொடரிலும் துணைக்கப்டனாக பணியாற்றுவார் என்று மேற்கிந்தியத் தீவுகளின் கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

அணியின் துடுப்பாட்ட வரிசை வலிமையாக உள்ளதாகவும், பந்து வீச்சாளர்கள்தான் அனுபவம் அதிகமற்ற இளம் வீரர்களாக உள்ளனர் என்று தேர்வாளர்களில் ஒருவர் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியின்போது கருத்துத் தெரிவித்தார்.

இருப்பினும் இங்கிலாந்தில் லாரா தலைமையிலான அணி சிறப்பாக ஆடி முத்திரை பதித்துத் திரும்பும் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

**மேற்கிந்தியத் தீவுகள் அணி**

பிரைன் லாரா (கப்டன்), ராம் நரேஷ் சர்வான், கிறிஸ் கெய்ல், டேவன் ஸ்மித், ஷிவ்நாராயண் சந்தர்போல், ட்வேன் ஸ்மித், ரிட்லி ஜேக்கப்ஸ் (விக்கெட் காப்பாளர்), ரவி ராம்போல், டினோ பெஸ்ட், பிடல் எட்வட்ஸ், ஜேர்மைன் லோசன், பெட்ரோ கொலின்ஸ், ஓமரி பாங்ஸ், கார்ல்டன் பாஹ், ட்வேன் பிராவோ மற்றும் சில்வஸ்டர் ஜோசப்.

## பெண்கள் உதைபந்தாட்ட அணி யாழ். மாவட்டத்தில் ஆரம்பம்!

யாழ். மாவட்டத்தில் முதன் முறையாக பெண்களுக்கான உதைபந்தாட்டப் போட்டி பயிற்சி நிகழ்வுகள் நேற்றுமுன்தினம் யாழ்.பல்கலைக் கழக மைதானத்தில் ஆரம்பமாகின.

தேசிய எழுச்சிப் பேரவையைச் சேர்ந்த ப.கனகலிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் யாழ்.மாவட்ட விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் மாதுளன் பொதுச் சுடரினை ஏற்றிவைத்தார். தொடர்ந்து தேசியக் கொடியை தமிழீழ விளையாட்டுத்துறையைச் சேர்ந்த ஈஸ்வரன் ஏற்றினார்.

இதனைத் தொடர்ந்து யாழ்.மாவட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட பெண் உதைபந்தாட்ட வீராங்கனைகளுக்கான பயிற்சிகள் ஆரம்பமாகின.

யாழ். மாவட்டத்தில் பெண்கள் உதைபந்தாட்ட அணியொன்று அமைக்கப்படுவது இதுவே முதன் முறையென்பது குறிப்பிடத்தக்கது.



யாழ்.மாவட்ட பெண்கள் உதைபந்தாட்ட அணி வீராங்கனைகளையும், பயிற்றுவிப்பாளர்களையும், தமிழீழ விளையாட்டுத் துறையைச் சேர்ந்தவர்களையும் படத்தில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடம் பெயர்ந்தோருக்கு தொடர்ந்தும் உலர் உணவு நிவாரணம் வழங்கப்படும்

வடக்கு - கிழக்குப் பிரதேசத்தில் இடம்பெயர்ந்த மக்களுக்கு வழங்கப்படும் நிவாரணம் - தொடர்ந்தும் வழங்கப்படும் என ஆசிய அபிவிருத்தி வங்கியின் இலங்கைக்கான வதிவிடப்பிரதிநிதி ஜோன் கூனி தெரிவித்தார்.

நிதி அமைச்சின் அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கடன் வழங்கும் வைபத்தில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் -

திருகோணமலை, அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்களில் சேதமடைந்துள்ள போக்குவரத்துக் கட்டமைப்பைப் பேணுவதற்கான நடவடிக்கைக்காகவே இன்று கடன் வழங்கப்படுகிறது.

போரினால் பாதிக்கப்பட்ட மாவட்டங்கள் வடக்கு - கிழக்கிலேயே அதிகம் உள்ளன. அவற்றைப் புனரமைக்க வேண்டிய பாரிய பொறுப்பு அனைவருக்கும் உண்டு.

வடக்கு - கிழக்கு அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதனூடாக, ஓர் அற்புதமான சூழல் உருவாக்கப்படவுள்ளது. வறுமைக் கோட்டின் கீழ் வாழும் அதிக மக்களைக்கொண்ட பகுதிகளாக இவை விளங்குவதால், இங்கு வழங்கப்பட்டுவரும் நிவாரண உதவி தொடர்ந்தும் வழங்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# பஞ்சவர்ண நரியார் மீண்டும் மேடையேறுகிறார்

குழந்தை ம.சண்முகலிங்கம் எழுதிநெறியாள்கை செய்த 'பஞ்சவர்ண நரியார்' சிறுவர் நாடகம் எதிர்வரும் 20ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நல்லூர் நாவலர் மண்டபத்தில் மேடையேற்றப்படவுள்ளது.

ஆரம்பப் பாடசாலை சிறார்களுக்காக தயாரிக்கப்பட்ட இந்த நாடகம் வடமராட்சி, வலிகாமம், யாழ்ப்பாணம், கல்விவலயங்களில் உள்ள இருபத்தைந்து ஆரம்பப் பாடசாலைகளில் இதுவரை மேடையேற்றப்பட்டுள்ளது.

பார்வையாளர்களாக சிறுவர்களும் பங்குகொள்வதாக இந்த நாடகம் வடிவமைக்கப்பட்டுள்ளதால், இதனைப் பார்க்கின்ற மாணவர்கள் மகிழ்ச்சியின் பிரவாகத்தில் காணப்படுகிறனர். இந்த நாடகத்தை, யாழ். மாவட்டத்தில் இயங்குகின்ற பல்வேறு ஆரம்பப்பாடசாலைகளும், தமது பாடசாலைகளில் மேடையேற்றுவதற்காக பதிவு செய்து வருகின்றன.

சிறுவர்கள் மத்தியில் பகிரப்படும் 'நிறம்மாறிய நரி' என்ற கதையை அடிப்படையாகக்கொண்டு இந்த நாடகம் தயாரிக்கப்பட்டுள்ளது. சிறுவர்கள் விரும்பும் ஆடல், பாடல்களுடன் விளையாட்டுக்களை உள்ளடக்கியதாக இதன் ஆற்றுகை காணப்படுகின்றது. இந்த ஆற்றுகை, நூறு பாடசாலைகளில் மேடையேற்றத் திட்டமிடப்பட்டுள்ளது.

### காலாவதியான பிஸ்கட்டுகள் அழிப்பு

கடந்த 10ஆம் திகதி நாவாந்துறை பகுதியில், திடீர் பரிசோதனை மேற்கொண்ட எமது பொது சுகாதார பரிசோதகர் குழுவினால் விற்பனை நிலையங்களில் வைக்கப்பட்டிருந்த மனித பாவனைக்குதவாத பிஸ்கட் பொருட்கள்கைப்பற்றப்பட்டு, உரிமையாளர் சம்மதத்துடன் அழிக்கப்பட்டன.

# நிர்வாக சேவை தரத்திலுள்ளோர் பிரதேச செயலகங்களில் பயிற்சி

(நெடுந்தீவு)

நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பணிமனைக்கு, பயிற்சி பெறுவதற்காக இலங்கை அரச நிர்வாக சேவை தரத்தைச் சேர்ந்த ஒருவர் யாழ். செயலகத்தினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

கடந்த 14ஆம் திகதி தொடக்கம் இரு வாரங்கள, இவர் பிரதேச செயலகத்தினது பணிகள் தொடர்பான தரவுகள், பயிற்சிகள் என்பனவற்றைப்பெறவுள்ளதாகத் தெரிய வருகின்றது. இதேபோன்று, நிர்வாக சேவைக்கு தெரிவு செய்யப்பட்ட ஏனையோர், ஏனைய பிரதேச செயலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும், தொடர்ச்சியாக ஒவ்வொருவரும் மாறி, மாறி ஒவ்வொரு பிரதேச செயலகங்களுக்கும் சென்று பயிற்சி பெறவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு சுழற்சிமுறையான பயிற்சிகள் முடிவடைந்ததும், இவர்கள் உதவி பிரதேச செயலாளர்களாக, பிரதேச செயலங்களுக்கு நியமிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (113)

# நெடுந்தீவுக்கான மின்விநியோகம் அரைமணித்தியாலத்தால் குறைப்பு

(நெடுந்தீவு)

நெடுந்தீவு பிரதேசத்துக்கான மின்சாரசபை மூலம் வழங்கப்பட்டுவரும் மின்சார விநியோக நேரம் கடந்த வாரம் முதல் அரை மணித்தியாலத்தால் குறைக்கப்பட்டுள்ளது.

இந்த மாற்றம் எந்தவித முன்னறிவிப்பும் இன்றி நேரங்கள் மாற்றப்பட்டதனால், கடந்த சில நாட்களாக பெரும் நெருக்கடி நிலை உருவாகியதுடன், கல்வி நிறுவனங்கள், வர்த்தக நிலையங்கள் போன்றவற்றிலும் பெரும் அசௌகரியங்களை ஏற்படுத்தியதாகவும், தற்போது நிலமைகள் சீரமைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (113)

# உதயதாரகை பயணிகள் படகு விரைவில் சேவையில் ஈடுபடும்

நெடுந்தீவு பல நோ.கூ.சங்கப் பயணிகள் படகான "உதயதாரகை" யின் திருத்த வேலைகள் துரிதமாக நடைபெற்று வருகின்றது.

தற்போது சேவையில் ஈடுபடும் படகில் குறைந்தளவான பயணிகளே பயணிக்க முடியுமானதாகும். மக்கள் பெரும் நெருக்கடி நிலைகளை எதிர்கொண்டு வருவதுடன், நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலய வருடாந்த மகோற்சவமும் ஆரம்பிப்பதால், பயணிகளுக்கான போக்குவரத்துச் சேவைக்காக இரவு, பகலாக திருத்த வேலைகள் நடைபெற்றுவருகின்றது.

சுமார் ஒரு வாரத்தில் வேலைகள் முடிவடைந்து, படகு சேவையில் ஈடுபடுமென தெரிவிக்கப்படுகின்றது. (113)

### நவாலி சென். பீற்றர்ஸ் ஆலய நவநாள் ஆராதனை

நவாலி சென். பீற்றர்ஸ் தேவாலய வருடாந்த நவநாட் கொண்டாட்டங்கள் எதிர்வரும் 20ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 5.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 9 தினங்கள் நடைபெறவுள்ளது.

தினமும் மாலை 5.30 மணிக்கு செபமாலை, ஆராதனை, பிரசங்கம், திருப்பலி என்பன இடம்பெறும்.

28ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 5.30 மணிக்கு நற்கருணை ஆராதனையும், சுற்றிப் பிரகாரமும் நடைபெறும். (206)

### தென்றல் திரைப்படம்

நல்ல சினிமா ஊடாக இன்னுமோர் உலகம் எனும் மகுடத்தின் கீழ் கட்டைவேலி -நெல்லியடி ப.நோ. கூ. சங்கத்துக் கலாசாரக் கூட்டுறவுப்பெருமன்ற ஆதரவின் கீழ் இயங்கும் திரைப்பட வட்டத்தினால், எதிர்வரும் 20ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3 மணிக்கு சங்க மண்டபத்தில் தங்கர்பச்சானின் இயக்கத்தில் உருவான தென்றல் எனும் முழுநீளத் திரைப்படம் காண்பிக்கப்படவுள்ளது.

திரைப்பட முடிவில் ஈழத்தின் திரைப்பட இயக்குநர் ஞானரதன், திரைப்பட விமர்சகர் குப்பிளான் ஐ.சண்முகம் ஆகியோரின் வழிநடத்தலில் விமர்சனமும், கலந்துரையாடலும் இடம்பெறவுள்ளது.

### நிறுத்தல் அளவைகளுக்கு முத்திரையிடல்

யாழ். மாவட்டத்திலுள்ள சகல நிறுவனங்களினதும் (கூட்டுறவுச் சங்கங்கள், சந்தை வியாபாரிகள் உட்பட) அனைத்து நிறுவைகள், அளவைகள், கருவிகளுக்கு யாழ். மாவட்ட செயலகத்தில் எதிர்வரும் 23, 29, 30ஆம் திகதிகளில் பரிசோதகர்களால் பரிசோதித்து முத்திரையிடப்படவுள்ளது.

இந்தக் கருவிகளுக்கு நடப்பாண்டில் முத்திரையிடத் தவறியோர் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்துமாறு கேட்கப்பட்டுள்ளது. அத்துடன், முத்திரை இடப்படாத கருவிகளை எந்தவித வர்த்தகத்திற்கும் பயன்படுத்துவதோ, அல்லது வர்த்தக நிலையத்தில் வைத்திருப்பதோ சட்டப்படி குற்றமாகும் எனவும் மேலதிக அரசாங்க அதிபரால் அறிவிக்கப்பட்டுள்ளது.

# நயினை நாகபூஷணி அம்மன் உற்சவம் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பம்

(நெடுந்தீவு)

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் வருடாந்த மஹோற்சவம் இன்று நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் 24ஆம் திகதி இரவும், 27ஆம் திகதி பகலுமாக இருதினங்கள் கயிலைக் காட்சியும், 27ஆம் திகதி இரவு மஞ்சத் திருவிழாவும், 30ஆம் திகதி இரவு சப்பறத் திருவிழாவும், ஆடிமாதம் முதலாம் திகதி பகல் 9.30 மணிக்கு தேர்த்திருவிழாவும், இரண்டாம் திகதி காலை தீர்த்தோற்சவமும், இரவு கொடியிறக்கமும் இடம்பெறுவதுடன் மூன்றாம் திகதி இரவு தெப்பத்திருவிழாவும் இடம்பெறவுள்ளது.

இதேவேளை, யாத்திரிகர்களின் நன்மை கருதி வழமைபோல, சீரான மோட்டார் படகு சேவை, அமுதசுரபி அன்னதான சபையினர் சேவை, மற்றும் தொண்டர் சபை, சாரணர், சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் முதலுதவிப் படையின் சேவைகளும், தாகசாந்தி நிலைய சேவையும் சீரான முறையில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாக ஆலய அறங்காவலர் சபையினர் தெரிவித்தார். (113)

# டெங்கு நோய் தடுப்புத் தொடர்பாக திணைக்களங்களுக்குச் சுற்று நிருபம்

(நெடுந்தீவு)

டெங்கு கொள்ளை நோயை தடுத்தல் தொடர்பாக, அரசாங்க நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சினால், அமைச்சுக்கள் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் போன்றவற்றுக்கு சுற்று நிருபமொன்று அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

டெங்கு நோயை இல்லாதொழிக்கும் தேசிய நிகழ்ச்சித் திட்டத்தின் ஒரு கட்டமாக ஒவ்வொரு வியாழக் கிழமையும் காலை 9 மணிமுதல் 10 மணிவரை அரச நிறுவனங்களின் அமைவிடங்களையும், சுற்றுப் புறங்களையும் சுத்தம் செய்ய நிறுவனங்கள் சார்ந்த பணித்தொகுதிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அந்தந்த அரச நிறுவனங்களின் பணித்தொகுதிகள், தொழிற்சங்கங்கள், நலன்புரிச் சங்கங்கள் மற்றும் பொதுமக்களின் ஒத்துழைப்புடன் இந்த நிகழ்ச்சித் திட்டங்களை செயற்படுத்த வேண்டும் எனவும் இதற்கென செயற்பாட்டுக் குழுக்களையும் அமைக்கலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (113)



குழந்தை ம.சண்முகலிங்கத்தினால் நெறியாள்கை செய்யப்பட்டு, செயல்திறன் அரங்க இயக்கத்தினரால் மேடையேற்றப்பட்டுவரும் "பஞ்சவர்ண நரியார்" நாடகத்தின் சில காட்சிகள்.

## இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்



### முதலாவது அகவையில்



பெயர் : செ.அபிராந்தன்
முகவரி : வலியாவத்தை, உடுப்பிட்டி.

### நான்காவது அகவையில்



பெயர் : க.துஷாரகா
முகவரி : துவாரகை அல்வாய்.

### ஆறாவது அகவையில்



பெயர் : ச.சஜீபன்
முகவரி : இமையாணன் உடுப்பிட்டி.

### பத்தாவது அகவையில்



பெயர் : தூ. பேனாட் ரிஷாந்
முகவரி : அரியாலை மத்தி, யாழ்ப்பாணம்.

### வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :
முகவரி :
பிறந்த ஆண்டு:
கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.
பெற்றோர் ஒப்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிநேகிதியே



கனிமொழி

# கலாசாரத்தைப் பாதுகாக்கும் பெரிய பொறுப்பு பெண்கள் தலையில் ஏன் வைக்கவேண்டும்

**'வானலையின் வரிகள்' என்ற நூலின் பெண் கவிஞர்களில் ஒருவரான கனமொழி வழங்கிய நேர்காணலை இங்கு தருகின்றோம்.**

ஆரம்ப காலங்களில் - எந்தத் துறையிலும் பெண்கள் அதிகமாக ஈடுபட்டார்கள் என்று சொல்வதற்கில்லை. இப்போதுதான் தமது தடைகளை உடைத்தெறிந்து வெளிவர ஆரம்பித்திருக்கிறார்கள். அதுபோலத்தான் கவிதைத்துறையிலும், சில பெண்களே ஈடுபட்டிருக்கின்றனர். அதில் முத்திரை பதிப்பவரும் மிகச் சிலரே. கவிதை மாத்திரமல்ல எந்தத் துறையை எடுத்தாலும் நிலைமை அவ்வாறாகத்தான் இருக்கிறது. அது மாத்திரமல்ல கவிதை எழுதுவதற்கு உலக அனுபவம் அதிகளவில் தேவைப்படுகிறது. ஆனால், அந்த அனுபவம் கிடைக்கக்கூடிய வாழ்க்கை முறை பெண்களுக்கு அவ்வளவு சுலபமாகக் கிடைத்து விடுவதில்லை. அதுவும் ஒரு பெரிய தடையாகவே இருக்கிறது.

கவிதை எழுதவேண்டும் அல்லது எனது அனுபவங்களை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளவேண்டும் என்ற முயற்சியுடன் நான் எழுத ஆரம்பிக்கவில்லை. எனது அனுபவங்களை எனது வலிகளை எனக்குள்ளேயே பகிர்ந்து கொள்பவையாகவே இருந்தன. எனது கவிதைகள் ஒரு வயதில் மொழிப்பற்றுள்ளவர்கள் முயன்று பார்ப்பது போலத்தான் நானும் எழுத ஆரம்பித்தேன். பின்னர் எழுதுவதிலும் எனது அனுபவங்களைப் படித்துவிட்டு, மற்றவர்களுடன் அதனைப் பகிர்ந்து கொள்வதிலும் கிடைத்த சந்தோஷத்தால் மேலும் மேலும் எழுத ஆரம்பித்தேன்.

என்னுடைய கவிதைகளில் கவிதையாக எனக்குள்ளேயும், மற்றவர்களிடம் அங்கீகாரம் கிடைத்தது. எனது கவிதை 'சுபமங்களா'வில் முதன் முதலில் பிரசுரிக்கப்பட்டபோதுதான், நானும் நல்ல கவிதைகள் எழுதுகின்றேன் என்ற தெம்பு ஏற்பட்டு, இன்னமும் எழுதுகின்றேன்.

இந்தத் துறைக்கு ஊக்குவித்தவர்கள் என்றால், எனது பெற்றோர்தான். நான் இப்போது எழுதும் இலக்கியத்துறைக்கான சூழல் எனது வீட்டில் இல்லாமல் இருந்திருக்கலாம். ஆனால், திராவிட இலக்கியத்துக்கான சூழல் இருந்தது. நான் என்தை எழுதினாலும் அதற்கொரு மரியாதை இருந்தது. எனது வீட்டிலுள்ளவர்களில் எழுதும் எழுத்திலும் பார்க்க கொஞ்சம் கொஞ்சமாக நான் வித்தியாசமாக விலகி, மரியாதை கொடுத்து சிந்தித்தாலும், எப்படி வித்தியாசமாகச் சிந்திக்கலாம் என்று கேட்டுத் தடைபோடாமல் விட்டதையே ஒரு பெரிய ஊக்கமாக நான் கருதுகின்றேன்.

என் எழுத்துக்களிலும் பெண்ணியக் கருத்துக்கள் உள்ளன. ஆனால், அவ்வாறான கருத்துக்கள் வரவேண்டும் என்பதற்காக வலிந்து எழுதுவதில்லை. சிந்திக்கக்கூடிய எந்த மனிதனும் ஒரு வர்க்கம் ஒடுக்கப்படுவதையோ, நோகடிக்கப்படுவதையோ பார்த்துக் கொண்டிருக்க முடியாது. என்னைப் பாதிக்கும் எல்லா விடயங்களையும் நான் எழுதும் பொழுது, பெண்ணாக நான் பாதிக்கப்பட்டதை எழுதாமல் இருக்கமுடியாது. பிற்போக்குவாதிகள் இதனைக் குற்றஞ்சாட்டலாம். அது அவர்களுக்கு மிகவும் பிடித்தமான விடயம். பெண்கள் காலகாலமாக அவர்களது கட்டுப்பாட்டில் இருப்பதென்பது அவர்களுக்கு மிகவும் சுலபமான விடயம். சமைப்பதற்கும், வீட்டைப் பராமரிப்பதற்கும், ஆண்கள் சாதிக்கும்போது, அவர்களுக்குத் துணையாக இருப்பதற்கும் ஒரு பெண் வீட்டில் இருக்கவேண்டும். இதனாலேயே பெண்கள் வீட்டைவிட்டு வெளியில் செல்வதை ஆண்கள் அனுமதிப்பதில்லை.

இதற்குக் கலாசாரம் என்ற போர்வை அவர்களுக்கு உதவுகிறது. பெண்கள் சமத்துவம் கேட்பதைக் கலாசாரம் மீறும் செயலாக அவர்கள் கருதுகின்றனர். கலாசாரத்தைப் பாதுகாக்கும் பெரிய பொறுப்பை ஏன் பெண்கள் தலையில் வைக்கவேண்டும்? ஆண்களும் சேர்ந்து பாதுகாத்துக் கொள்ளலாமே? அது மாத்திரமல்ல ஆண்கள், பெண்களின் வாழ்க்கையில் மாறுதல், விடுதலை வேண்டும் என்கிறார்கள். ஆனால், அதை அவசரமாகத் தர விரும்புவதில்லை. காலம் போகப்போக விடுதலை கிடைக்கும் என்று கூறுகிறார்கள். அது எனக்குப் புரியவில்லை.

நான் சுபமங்களா பத்திரிகைகளில் மட்டும் எழுதுவதில்லை. என்னுடைய கவிதையை வந்து குமுதத்தில் கேட்டாலும் கொடுத்திருப்பேன். என்னுடைய கவிதைகள் வெகுஜன பத்திரிகைகளிலும் வந்ததுண்டு. எனக்கு எந்த இதழில் கவிதை வருகின்றது என்ற பிரச்சினை கிடையாது. நான் எழுதும் கவிதையைப் பத்திரிகைக்காக எனது கருத்தையோ, எழுத்தையோ மாற்றுவது கிடையாது. பத்திரிகைகள் அவற்றை வலியுறுத்தினால் அந்தப் பத்திரிகைகளுக்கு நான் எழுதமாட்டேன். என்னுடைய கவிதையை 3 லட்சம் பேர் படிக்கிறார்கள். எனவே, எழுத்தில் நான் மாற்றம் செய்யப் போவதில்லை. ★

# நிறங்களின் இரசாயனப் பொருளில் நோயெதிர்ப்பு சக்தி

இன்று எமது உணவு முறைகளும், உணவு வகைகளும் முற்றிலும் மாறிவிட்டன. பாடசாலைக்குச் செல்பவர்களும், வேலைக்குச் செல்பவர்களும் அவசரத்தில் கிடைத்ததைச் சாப்பிட்டுவிட்டுப் செல்கிறோம். உடலுக்குச் தேவையான நார்ச்சத்து அடங்கிய மரக்கறி வகைகளையோ, பழவகைகளையோ பொறுமையாக அமர்ந்து சாப்பிடுவதில்லை. இதனால், இதயநோய், இரத்தஅழுத்தம் போன்ற நோய்கள் ஏற்படத் தொடங்கிவிட்டன.

மருத்துவர்களின் ஆலோசனைப்படி - மரக்கறி வகைகளையும், பழவகைகளையும் அதிகம் சாப்பிடவேண்டும். ஏனெனில், இவற்றின் நிறங்களிலுள்ள வேதிப்பொருட்களில்தான் நிறைய நோயெதிர்ப்புச் சக்திகள் அடங்கியுள்ளன. இவற்றினால்தான், எமக்கு ஏற்படப்போகும் நோய் ஆபத்துக்களிலிருந்து பாதுகாக்க முடியும்.

மரக்கறி வகைகளிலும், பழங்களிலும் நிறமூட்டக்கூடிய நிறமிகள் நிறையவே உள்ளன. இவைகள் பலவகை நிறங்களில் எமக்குக் கிடைக்கின்ற படியால், அந்த நிறமிகளிலுள்ள இரசாயனப் பொருட்களும், தாவர உயிர்ச் சத்துக்களும்தான் பல நோய்களிலிருந்து எம்மைப் பாதுகாக்கின்றது.

இதனால், ஒருநாளைக்கு 10 வகையான நிறங்கள் அடங்கிய மரக்கறி வகைகள், பழவகைகளை உட்கொள்ளவேண்டும். இந்த நிறங்கள் ஒன்றுடன் ஒன்று சேர்ந்து, நோயெதிர்ப்பு சக்தியை உருவாக்கி நோய் ஏற்படுவதைத் தடுக்கின்றது.

இதன் காரணமாக மரக்கறி வகைகளையும், பழவகைகளையும் நிறையவே உண்ணுமாறு மருத்துவர்கள் வற்புறுத்துகிறார்கள். மரக்கறி வகைகளை அதிக நேரம்வரை வேகவைக்கக்கூடாது. மிதமிஞ்சிய வெப்பத்தால் நிறமிகளின் தன்மை அழிந்துபோவதுடன், அதிலுள்ள விற்றமின்களும் அழிந்து விடுகின்றன.





எமது உடலுக்குத் தேவையான நோயெதிர்ப்பு சக்தி எல்லாக் காய், கனிகளிலுமுள்ளன என்றாலும், ஏனையவற்றைவிட, தோடம்பழம், மாம்பழம், திராட்சை, பிளம்ஸ், தக்காளி, கரட், உருளைக்கிழங்கு, முட்டைக்கோஸ் மற்றும் பழரசங்களிலும் மிக அதிகமாகக் காணப்படுகின்றன. சக்திமிக்க, நிறங்களைக் கொண்ட சிலவகைக் காய்கனிகள் கீழே தரப்பட்டுள்ளன.

**பச்சை** - இந்த நிறக் காய்கறிகளிலுள்ள இரசாயனப் பொருட்கள் சிலவகைப் புற்றுநோய்களைத் தடுப்பதுடன், பார்வையை நன்றாக வைத்துக்கொள்ளவும் உதவுகின்றன. பச்சைநிற இலைகளிலுள்ள கீரை வகைகள் பச்சைநிற அப்பிள், திராட்சை, எலுமிச்சை, பீர்க்கங் காய் போன்றவற்றில் இந்தச் சக்தி அதிகமுண்டு.

**சிவப்பு** - சிவப்பு நிறத்திலுள்ள காய்கனிகளிலுள்ள இரசாயனப் பொருட்கள் இதயநோய் வராமல் தடுக்கும். நல்ல ஞாபகசக்தியைக் கொடுக்கும். சில வகையான புற்றுநோய்கள் வராமல் தடுக்கும். தக்காளிப் பழத்தை அடிக்கடி உணவில் சேர்ப்பதால், புற்றுநோய்வர வாய்ப்பே இல்லை என்கிறார்கள் மருத்துவர்கள். தர்பூசணி, செரிப்பழம், பீற்றூட், ஸ்ரோபெரி, போன்றவையில் இந்தச் சக்தி அடங்கியுள்ளது.

**நீலம், ஊதா** - இதிலுள்ள இரசாயனப்பொருட்கள் நோயெதிர்ப்பு சக்தி அதிகம் கொண்டவையாகக் காணப்படுகின்றன. விரைவில் முதுமை அடைவதையும் தடுக்கின்றன. ஊதா நிறத் திராட்சை, பிளம்ஸ், உலர்ந்த கறுப்புத் திராட்சை ஆகியவற்றில் சக்தி அதிகமாகவுள்ளன.

**ஒரேஞ், மஞ்சள்** - இதில் நோயெதிர்ப்பு சக்தி அதிகம் கொண்டவை. விற்றமின் - சி அடங்கிய சக்தி உண்டு. கண்பார்வை சம்பந்தமான நோய்கள், இதயம் தொடர்பான நோய்கள் வருவது மிகக்குறைவு. கரட், எலுமிச்சை, மாம்பழங்கள், மஞ்சள்நிறப் பேரிக்காய், பூசணிக்காய் மற்றும் மஞ்சள்நிறப் பழரசங்களிலும் இந்தச் சக்தி அதிகம் காணப்படுகின்றது.

**வெள்ளை** - இந்த நிறத்தினாலான காய்கனிகளை உணவாக உட்கொண்டால், புற்றுநோய்க்குரிய அபாயம் குறைவென ஆய்வுகள் குறிப்பிடுகின்றது. வெங்காயங்களிலிருந்து கிடைக்கும் அலிசின் என்ற இரசாயனப்பொருள் கொலஸ்ரோலையும், இரத்த அழுத்தத்தையும் குறைக்கும் சக்தி கொண்டவை. வெங்காயம், உள்ளி, வாழைப்பழம், காளான்கள், இஞ்சி, வெள்ளை உருளைக்கிழங்கு, முள்ளங்கி ஆகியவற்றை இதனோடு சேர்க்கலாம்.

இவ்வாறான நிறங்களில் காணப்படும் காய்கனிகளை [illegible] உணவில் சேர்த்து நோயின்றி வாழ வழிசெய்யுங்கள். "நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என்பதை மனதில் கொள்ளுங்கள்.

# சிநேகிதிக்கு ஒரு மடல்



அன்புள்ள சிநேகிதியே,

உன் நலம் நாடும் பிரிய சிநேகிதி எழுதிக்கொள்வது. நண்பியே உனது கடந்த மடலிற்குப் பதில் வரையாமைக்கு என்னை மன்னித்துக்கொள். நேசக் குறைவல்ல. நேரக் குறைவே காரணம்.

அது சரி, அன்று நீ நீண்ட நாட்களுக்குப் பின்னர் தொலைபேசியில் பேசியபொழுது மனம் சந்தோஷ வானிலே சிறகடித்தது. ஆனால், இறுதியில் இன்று குடாநாட்டில் ஒளிபரப்பாகும். தொலைக்காட்சி நாடகங்கள் பற்றிய உனது கருத்தினை என்னால் ஏற்றுக்கொள்ள முடியாது.

சின்னத்திரைத் தொடர் நாடகங்கள் - பெண்களது உள்ளார்ந்த உணர்வுகளை வெளிப்படுத்துவதாக நீ கூறிய கருத்து எமது பண்பாட்டின் இருப்பு நிலையில் நின்று நோக்கும் போது நிராகரிக்கப்பட வேண்டியவை.

பணத்தினைப் பொருட்டாக கொண்டு தயாரிக்கப்படும் தென்னிந்திய மாயை நிறைந்த தொலைக்காட்சித் தொடர் நாடகங்கள், எமது பண்பாட்டுக் கலாசார உறவுகளிலே விரிசல்களை ஏற்படுத்துவதுமல்லாமல், அன்னை என்றும், சக்தி என்றும் ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக எமது கலாசாரத்திலே வஞ்சிக்கப்பட்ட பெண்மையின் மேன்மையை சீரழிக்கின்றன.

மைதிலி முதல் மருமகள் வரை காவியாஞ்சலி தொடக்கம் காவேரி வரை எந்தத் தொலைக்காட்சி நாடகங்களாக இருந்தாலும், பெண்ணையே மையப்படுத்தி நகர்த்திச் செல்வதுடன் பெண்மை தொடர்பான மிதவாதக் கருத்துக்களை முன்வைக்கின்றன.

அன்னையின் உறவினருக்குச் சமனானதாக எமது கலாசாரத்திலே மதிக்கப்படும் மாமி, மருமகள் உறவினை இன்றைய தொலைக்காட்சி நாடகங்கள் இழிவுபடுத்துகின்றன.

வயது வந்தவுடன் தாய் தந்தையரையே பிரிந்து சென்று தனிக்காட்டு ராஜாக்களாக வாழ்க்கை நடாத்தும் இளைய சமூகத்தோடு ஒன்றித்துப் போய்விட்ட உனக்கு இது புரியாது.

ஆனால், தன் கணவனது தாயினை தன் சொந்தத் தாயாக நினைத்து வாழும் எம் பெண்களைப் பொறுத்தவரையில் இந்தத் தொலைக்காட்சித் தொடர்கள் இந்த அற்புத உறவினை இழித்துரைப்பனவாகவே காணப்படுகின்றன.

நண்பியே - மருமகள் என்பதன் உண்மையான அர்த்தம் என்ன தெரியுமா? மறு மகள் அதாவது இன்னொரு மகள் என்பதே இதன் அர்த்தமாகும். இத்தகைய உறவினை இன்றைய தொலைக்காட்சி நாடகங்கள் எப்படிக் காட்டுகின்றன என்பது உனக்கு நான் சொல்லித் தெரியவேண்டியதில்லை.

இந்தத் தொலைக்காட்சித் தொடர்கள் மாமி என்ற உறவினை சண்டாளிகளாகவும், கொடுமைக்காரிகளாகவும் காண்பிக்கின்றன. மாமி என்கின்ற உறவு எப்பொழுதும் மருமகளுக்கு எதிரி என்கின்ற கருத்தினையே இவை வெளிப்படுத்தி நிற்கின்றன.

இதனால், இன்றைய இளம் பெண்கள் திருமணத்தின் முன்பே தமக்குள் தப்பான அபிப்பிராயங்களை வளர்க்க இன்றைய சின்னத்திரை காரணமாகின்றது.

நண்பியே இன்னும் எத்தனையோ எண்ணங்கள் என் உள்ளத்திலே தோன்றுகின்றன. அத்தனையும் இப்போ என்னால் எழுதிவிட முடியாது. எனவே இத்துடன் முடிக்கின்றேன்.

அன்புள்ள சிநேகிதி
நீலா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிஞ்சுமுகத்தின் தேடல்

அம்மா வேகமாக நடந்து கொண்டிருந்தாள். நான் அவளுக்குப் பின்னால் ஓடிக் கொண்டிருந்தேன். என்கையில் இருந்த பையில அவ்வளவு கனமில்லை. அதில் இருந்தது இரண்டொரு உடுப்புக்கள் மட்டுமே. அதைவிட இரண்டு புதிய கொப்பிகள், ஒரு பென்சில், அதன் அடியில் அழியும் பொருத்தப்பட்டிருந்தது. இவ்வளவுதான் என்னுடைய சொத்தாம்.

அம்மா.... அவள் என்னையும், என் தங்கையையும் வளர்க்க என்ன பாடுபட்டிருக்கிறாள். அப்பா எங்களை விட்டுவிட்டு வேறு திருமணம் செய்துவிட்டார். அவரை நான் கண்டதில்லை. என் நினைவில் அம்மாவின் தோற்றம் நிழலாடியது. அம்மா கறுப்புத்தான். ஆனால், மிகவும் சுறுசுறுப்பானவர். அவளுடைய கைகளில் என் தங்கை இருக்கும் போது.... பாலும் கோப்பியும்போல இருக்கும். என்ரை தங்கைக்கு இப்ப இரண்டு வயது. எனக்கு ஆறு வயது. எனது நடை தளர்ந்தது.. கொஞ்சநேரம் நின்றேன். அம்மா....! என்று கூப்பிட்டேன். அம்மாவும் நின்றாள். வெயிலில் நடந்த களைப்பு அவள் முகத்திலும் தெரிந்தது. வியர்வைத் துளிகள் வடிய அவள் நின்ற கோலம் என் நினைவைப் புரட்டியது. நான் என் நினைவலைகளின் பின்னே சென்றேன்...


அன்றொருநாள்... நான் அம்மாவிடம் கேட்டேன். அம்மா எனக்கு வீட்டிலை தனிய இருக்கப் பயமாக இருக்கு. நானும் நீ வேலை செய்கிற இடத்திற்கு வரட்டுமா...? அம்மா முதலில் கொஞ்சம் யோசித்தாள். பிறகு 'சரி நீ என்னோடை வா குஞ்சு! ஆனால், நான் சொல்லுற இடத்திலை இருக்கவேணும் வேற ஒருடமும் ஓடித் திரியக்கூடாது!" என்று. நானும் சரியென்று தலையாட்டினேன். அம்மா விடிய வெள்ளென எழும்பி வெளிக்கிட்டாள். எனக்குத் தேநீரும் கையில் சீனியும் தந்தாள். நாங்கள் தேநீருக்குச் சீனி போட்டுக் குடிப்பதில்லை. சீனியை உள்ளங்கையில் வைச்சு நக்கித்தான் குடிக்கிறது வழக்கம்.... இது எங்கட சிக்கனமுறை. நிவாரணத்துக்குத் தாற சீனியை அடுத்த நிவாரணம் வாறவரைக்கும் வைச்சுக் குடிக்க இதுதான் நல்ல வழி. எல்லாம் அம்மாவின்ரை ஏற்பாடுதான்...

நானும், அம்மாவுமாக ஒழுங்கையால நடந்து வந்து றோட்டிலை வந்து மினிபஸ் நிக்கிற பூவரச மரத்தடியிலை நின்றோம். அம்மாவோடை வேலை செய்யிற வேறை பொம்பிளையள் முதலிலை வந்து நிக்கினம். நான் அவையளைப் பார்த்தேன். எல்லோரும் கறுப்புத்தான். ஆனால், வெற்றிலை போட்டதாலை எல்லோருக்கும் சொண்டு மட்டும் சிவப்பாயிருந்தது. பல்லும் நல்ல வெள்ளை. எல்லோரும் சிரிச்சுக் கதைச்சுக் கொண்டிருந்தினம்... அந்த நேரம் தட்டிவான் ஒண்டு வேகமாக வந்து நிண்டுது. அதிலை இருந்து ஒருத்தர் இறங்கி வந்து சத்தம் போட்டார். "எல்லோரும் கெதியா ஏறுங்கோ! நேரம் போட்டுது! முதலாளி பேசப் போறார்!." முதல்ல ஒரு மனிசி ஏறிச்சுது! அவவின்ர இடுப்பிலை பாவைப்பிள்ளை போல ஒரு வடிவான பிள்ளை! நலல குண்டு மாம்பழம் போல கன்னம்!. வண்டு போலக் கண்கள். அது என்னைப் பார்த்துச் சிரிசசுது. ஐயோ! றோசாப்பூப் போல.... எனக்கு அந்தப் பிள்ளையைத் தூக்கிக் கொஞ்ச வேணும்போல இருந்தது. எல்லோரும் ஏறுங்கோ! அந்த மனுசன் கத்திக் கொண்டே எனக்குக் கிட்ட வந்தது. நான் நிமிர்ந்து பார்த்தேன்! பெரிய கறுத்த உருவம் சிலுப்பாத் தலை. பெரிய மண்வெட்டிப் பல்லு. சிவத்தக் கண்கள்! போனகிழமை எங்கட ஊரில நடந்த 'சத்தியவான் சாவித்திரி' கூத்திலை வந்த யமன்போல பயங்கரமான உருவம். நான் அம்மாவுக்குப் பின்னாலை ஒளிக்க.... அம்மா அவரிட்டைச் சொன்னது என்ர காதிலயும் விழுந்தது.

"ஐயா! பிள்ளைக்குத் தனிய இருக்கப் பயமாம். இண்டைக்கு மட்டும் கூட்டிக்கொண்டு வந்திட்டன். நாளைக்கு ஆரோடையும் விட்டிட்டு வாறன்!" "சரி! சரி! போய் ஏறு! எல்லோரும் மாடும் கண்டுமாய் வந்தால் என்ன செய்யிறது!" அவர் பேசிக்கொண்டிருக்க நானும் அம்மாவும் ஓடிப்போய் ஏறினோம். அந்த றோசாப்பூவுக்குப் பக்கத்திலே எங்களுக்கும் இடம் கிடைத்தது. எனக்கு நல்ல மகிழ்ச்சி அந்தப் பிள்ளையும் என்னை நோக்கிக் கையை நீட்டியது. நானும் அதைத் தாவி அணைத்து வாங்கி மடியில் இருத்திக் கொண்டேன். நான் யன்னல் ப்க்கமாக இருந்தேன். அம்மாவும் பிள்ளையின்ரை தாயும் பேசிக்கொண்டிருந்தார்கள். அம்மா கேட்டாள். "பிள்ளையை எத்தனை நாளைக்கு இப்பிடிக் காவித திரியப் போகிறாய்?" அந்த அம்மா சொன்னா "நான் என்னக்கா செய்யிறது? இந்தக் குழந்தையை ஆரட்டை விட்டிட்டு வாறது? பால் குடுக்க வேணும்! ஏதோ அவற்ர நினைவாக இது ஒண்டுதான் என்னோட இருக்குது. இதையும் நான் இழக்க விரும்பவில்லை அக்கா! எண்டு சொல்லிய அந்த அம்மா, பிள்ளையை என்னட்டை வேண்டி மடியில கிடத்திப் பால் குடுத்தா. பிள்ளைக்குத் தாய்ப்பால் குடிப்பது நல்ல மகிழ்ச்சிதான். தன்ரை காலை என்னிலை உதைச்சுக் கொண்டு குடிச்சுக் கொண்டிருந்தது. நான் அந்தப் பிஞ்சுக் கால்களை மெல்லத் தடவிக் கொடுத்துக் கொணடிருந்தேன். அம்மா கேட்டாள்! "பிள்ளைக்கு என்ன பெயர் வைச்சிருக்கிறாய்." "பவளம் எண்டு வைச்சிருக்கிறன்." நல்ல பொருத்தமான பெயர்தான் - நான் நினைக்கப் பிள்ளைக்குப் புரையேறியது. அம்மா தலையிலே மெதுவாகத் தட்டினாள். பவளம் கடை வாயில் பால் வழியத் துள்ளி எழும்பி என் மடியில் வந்து இருக்க.... பேரிடி போல ஒரு சத்தம்... எங்கடை வாகனம் இன்னொரு வாகனத்தோடை மோதித் தறி கெட்டுத் தலைகீழாப் புரண்டது. நான் பவளத்தை இறுக அணைத்தபடி அம்மா! என்று கத்தினேன்...!

எங்கட வாகனத்தைச் சூழ பலர் வந்து எல்லோரையும் தட்டிவானில் இருந்து வெளியே இழுத்தெடுத்தார்கள். என்கையில் பவளத்தோடு நான் மீட்கப்பட்டேன். அம்மாவும் வெளியே இழுத்தெடுக்கப்பட்டாள். அம்மா என்னையும், பவளத்தையும் கட்டிப்பிடித்துக்கொண்டு "கடவுளே என்ர குஞ்சுகளைக் காப்பாற்றிப் போட்டாய்..." என்று அழுதாள். அம்மா முகததில் வியர்வையும் கண்ணீருமாய் நின்றது என்ரை மனத்தில இப்பவும் அழியாத கோலமாய் இருந்தது. அம்மா பவளத்தின்ரை அம்மாவைத் தேடினாள். காயப்பட்டவர்கள் பலர். எல்லோரையும் வெளியே எடுத்தாச்சு.

அம்மா! அங்கை சிவப்புச் சீலையோட... நான் தான் அம்மாவுக்குக் காட்டினேன். அம்மா பாய்ந்தோடினாள். நானும் பவளத்தைச் சுமந்தபடி பின்னால் ஓடினேன். பவளத்தின்ர அம்மா... கண்விழித்தபடி கிடந்தா.... அவவைக் கைபிடித்துப் பரிசோதித்த வெள்ளை உடுப்புப் போட்டவர் கையைக் கீழே விட்டுவிட்டு கண் இமைகளையும் மூடிவிட்டார்.



அம்மா! ஐயோ என்ர ராசாத்தி! இந்தப் பிஞ்சை விட்டிட்டுப் போட்டியே! என்று குழறி அழுதாள். எனக்கும் அழுகை வந்தது. நானும் அழுதேன். பவளத்தின்ரை அம்மாவின்ர உடம்பை எடுத்துக் கொண்டு போக அம்மா... பெருங்குரலில் அழுதாள். பவளததை அம்மாவிடம் நான் கொடுத்தேன். அம்மா அவளைத் தோளில் சாத்தினாள். அன்றிலிருந்து பவளத்தை அம்மாவே வளர்க்கிறாள். பவளம் என் தங்கையாகிவிட்டாள். நான் மீண்டும் நடக்கிறேன்! பவளம்... அம்மாவின தோளுக்கு மேலால் என்னைப் பார்த்துச் சிரிக்க நானும் சிரித்தேன். ★

மனோன்மணி சண்முகதாஸ்.

# பண்பாட்டோடு கூடிய பெண் விடுதலையைப் பேணுவோம்

இன்றைய சமூகத்தில் பெண்ணானவள் பரந்துபட்ட எண்ணக் கருவுடன் வெளிவந்து விட்டாள். பெண்களை வீட்டுக்குள் அடைத்து வைத்த சமூகமே இன்று அதுவாகவே வெளிக்கொண்டு வந்து விட்டிருக்கின்றது. பெண்களின் பண்பாடு என்ற மூட நம்பிக்கைகளை வளரவிட்டு அதையே பின்பற்றிவரும் மனிதர்கள் இருக்கும்வரை பெண்ணுக்குப் பல பிரச்சினைகள் வந்து கொண்ட வண்ணமே இருக்கின்றது.

ஆரம்ப காலங்களைவிட இன்றைய காலங்களில் பெண்ணிடம் பல மாற்றங்கள் காணப்படுகின்றன. தனியாக வெளியூர் சென்று கல்வி கற்று வருகின்றாள். தூர இடங்களுக்குச் சென்று தனியான வீட்டிலிருந்து தொழிலையும், கல்வியையும் மேற்கொண்டு தனது வாழ்வில் ஒரு உயர்வான இடத்தை அடைகின்றாள் பெண். அத்தோடு கலையிலும், போரிலும், ஆணுக்கு சரிக்குச் சமமாகநின்று உழைக்கின்றாள்.

ஆரம்ப காலங்களில் ஆண் அடக்குமுறைகள் இருந்திருக்கலாம். ஆனால், இன்று ஆண் அடக்குமுறை என்று சொல்வதற்கு இடமில்லை. ஆனால், சீதனம் என்பது ஒரு பிரச்சினையாகவே இருந்து வருகின்றது.



பெண்ணானவள் சீதனம் கொடுத்து திருமணம் செய்யும் நிலையானது, ஆண்களில் மட்டுமல்ல பெண்களாலும் உருவாக்கம் நிகழ்ந்திருக்கின்றன. சீதனம் வாங்க வேண்டாம் என்று கூறும்பெண், தான் மாப்பிள்ளை பார்க்கின்றபோது மருத்துவராக இருக்கவேண்டும் அல்லது பொறியியலாளராக இருக்கவேண்டும், உயர்பதவிகளில் வேலை செய்பவர்கள் தனக்குக் கணவனாக வரவேண்டும் என எதிர் பார்க்கின்றாள்.

அதற்கேற்ப மணமகனைத் தெரிவு செய்கின்றாள். ஆண்களும், பெண் பார்க்கின்றபோது அழகாக இருக்க வேண்டும். வீடு, சீதனம் வாங்க வேண்டும் என்று நினைக்கின்றான். சீதனம் என்ற கொடுமையானது இருபாலாரினாலும் ஏற்படுகின்றது.

பெண்களுக்கு விடுதலையானது - தமிழ் பண்பாடோடு ஒட்டியதாக இருக்கவேண்டும். எமது நாகரிகம் மேம்படுத்தப்படவேண்டும்.

பெண்களின் அடையாளத்தையே இழந்து நிற்கக்கூடிய அளவில் வெளிநாட்டு மோகங்கள் எமது பெண்களிடம் காணப்படுகின்றது.

எது முடியாதோ அதனை முடித்துக் காட்டுகின்ற திறமையில் எமது மண்ணில் பெண்கள் செயற்படுகின்றார்கள். அதாவது ஆயுதம் ஏந்திப் போராடத் துணிந்தாள் பெண். அதில் வெற்றி கண்டாள் இன்று உலக அரங்கில் பேசப்படுகின்றாள். இவ்வாறு பார்க்கும் போது, பெண்ணானவள் வளர்ச்சி கண்டுவிட்டாள். இதனால், இன்று இந்தச் சமூகம் திருப்தி கண்டிருக்கிறது. விடுதலை அடைந்திருக்கிறது. ..

இப்படியாக இருந்தும் எங்கோ ஒரு மூலையில் பெண்கள் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டும், கணவனால் கொடுமைப்படுத்தப்பட்டும், சித்திரவதை செய்தும், வீட்டுக்குள் அடைத்து வைத்தும் கொடுமையான வாழ்க்கைக்கு உட்படுத்தப்படுகிறாள். இவைகள் நிவர்த்தி செய்யப்படவேண்டியது.

இதற்கு ஆண்கள் மட்டும் காரணமாக இருக்கமுடியாது. பெண்ணும் இதற்குக் காரணமாக இருக்கலாம். யாரிடம் பிழை இருக்கிறது. தவறு நடக்கிறது என்று அறிந்து, ஆணுக்குரிய பிழைகளை ஆணும், பெண்ணுக்குரிய பிழைகளைப் பெண்ணும் தீர்த்துக்கொள்ள முடியும்.

செல்வா

# சிரித்த முகத்துடன் வழியனுப்பத் தயாராகுங்கள்



இன்றைய காலகட்டத்தில் நான்கு, ஐந்து வயதுப் பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்ப வேண்டிய சட்டாயம் பெற்றோருக்கு ஏற்பட்டுள்ளது. பாடசாலைக்குப் பிள்ளைகளை அனுப்புவதற்கு அனுமதி கிடைத்துவிட்டது என்று மகிழ்ச்சியடைய முடியாது. ஏனென்றால், ஓரளவு வயது வந்த பிள்ளைகளாயின் பரவாயில்லை. இவர்கள் சிறுவயதுப் பிள்ளைகள் என்பதால், பாடசாலைக்கு செல்வதற்கு அடம் பிடித்தும், அழுதும், அமர்க்களம் செய்வார்கள். இவர்களை எப்படிச் சமாளிப்பது எனப்பார்ப்போம்.

முதலில் பிள்ளைகளை உடல்ரீதியாகவும், பின் மனரீதியாகவும் பாடசாலைக்குப் போகத் தயாராக்க வேண்டும். காலை எழுந்தவுடன் பல்துலக்குவது, குளிப்பது, பால் குடிப்பது போன்ற அன்றாடப் பழக்கங்களைப் பாடசாலைக்குச் செல்லவிருக்கும் காலத்துக்கும் சில மாதங்களுக்கு முன்பிருந்தே வழக்கத்துக்குக் கொண்டு வரவேண்டும்.

பிள்ளையின் அண்ணா, அக்கா ஏற்கனவே அந்தப் பாடசாலையில் படித்துக் கொண்டிருந்தால், அவர்களுடனே சேர்த்து பாடசாலைக்கு அனுப்பலாம். அல்லது பெற்றோர்களுடன் செல்லுதல் வேண்டும். 'நான் மட்டும் தனியாகப் போகிறோம்' என்ற பயம் பிள்ளையின் மனதில் ஏற்படாது.

'பாடம் படிக்காவிட்டால் ரீச்சர் அடிப்பா....' 'சாப்பிடாவிட்டால் வகுப்புக்குள் அனுமதிக்க மாட்டார்' என்று பாடசாலை பற்றியோ, ஆசிரியர் பற்றியோ பயமுறுத்தக்கூடாது. அதற்குப் பதிலாக 'நீ' நன்றாக சாப்பிடவேண்டும். சுத்தமான உடைகளை உடுக்க வேண்டும். சுத்தமாக இருக்கவேண்டும் அப்போதுதான் ரீச்சர் பாராட்டுவா, அப்போதுதான் எல்லோரும் பிள்ளையை விரும்புவினம் என்று சொல்லிக்கொள்ளுங்கள். பிள்ளைகள் உற்சாகமாகிவிடுவார்கள். எதிர்மறையான வாக்கியங்களைப் பாவிக்காமல் உற்சாகமான வார்த்தைகைளைத் தேர்ந்தெடுத்து அறிவுரைகளை வழங்குங்கள்.

பிள்ளைகள் சிலர் பாடசாலைக்குள் நுழைந்தவுடன் அழ ஆரம்பிக்கும் அந்தச் சமயத்தில் பெற்றோர் செல்லம் கொஞ்சிக்கொண்டு நிற்காமல் பாடசாலையைவிட்டு தாமதமாக வெளியேறிவிடவேண்டும். மூன்று, நான்கு நாட்களின் பின் அவர்களாகவே சமாதானமாகி விடுவார்கள்.

பாடசாலைக்குச் செல்லும் நேரங்களில் தலைவலி, வயிற்றுவலி, பல்வலி என்றுசாட்டு போக்கு சொல்வார்கள். இதனைச் செவிசாய்ந்து அவர்களின் விருப்பப்படி பாடசாலைக்கு அனுப்புவதை நிறுத்திவிடாதீர்கள்.

அம்மா பிள்ளைக்கு மருந்து தருகின்றேன். குடிச்சிட்டுப் போனால் வலி எல்லாம் போய்விடும் என்று சமாதானம் கூறி அந்த நோய்க்குரிய மருந்தைக் குடிக்கக் கொடுத்து பாடசாலைக்கு அனுப்பிவிட வேண்டும். ஒருமுறையாவது அவர்கள் சாட்டுக் கூறுவதை செவி சாய்த்தால் அடிக்கடி இதையே சாட்டாகக் கொள்வார்கள்.

பாடசாலைக்குக் கொண்டு செல்லும் புத்தகப்பை, தண்ணீர் போத்தல் என்பவற்றை பிள்ளைகளுக்கு பிடித்த விதத்தில் வாங்கிக் கொடுங்கள். அவற்றில் பிள்ளையின் பெயர், வகுப்பு என்பவற்றை அழகான கலர் பென்சிலால் எழுதித் தொங்கவிடுங்கள். புத்தங்கள், கொப்பி என்பவற்றுககு அழகான உறைகளைப்போட்டு, அதிலும் பெயர், வகுப்பு என்பவற்றை எழுதிக் கொடுத்துவிடுங்கள். இதனால், படிக்கவேண்டும், எழுதவேண்டும் என்ற ஆர்வம் ஏற்படும். இது மட்டுமல்ல. தன் பொருட்களைக் கவனமாக வைத்துக்கொள்ள வேண்டும் என்ற பொறுப்புணர்ச்சியும், அவர்களின் பொருட்கள் தொலைந்து போய்விட்டால், இவர்களுடையதென உறுதிப்படுத்துவதற்கு இலகுவானதாகவும் இருக்கும்.

பாடசாலை முடிந்து வீட்டுக்கு வந்ததும், வராததுமாக 'என்ன பாடம் படித்தீர்கள்' 'என்ன பாட்டு ரீச்சர் சொல்லித்தந்தா பாடிக்காட்டு' என்று கேட்காதீர்கள். முதலில் பிளளையின் உடைகளைக் கழற்றி, வேறு உடை அணிய வைத்து கை, கால், முகம் கழுவிய பின், சாப்பிடக்கொடுங்கள். அதன்பின் உங்கள் கேள்விகளைக் கேளுங்கள். அல்லது அவர்களாகவே உங்களைத்தேடி வந்து விடயங்களைச் சொல்வார்கள்.

இனியென்ன, பிள்ளைகளை சிரித்த முகத்துடன் வழியனுப்பத் தயாராகுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்த வார பலன்கள்

## 18.06.2004 - 24.06.2004 (திருக்கணிதம்)

| | | | |
|---|---|---|---|
| | ராகு | சுக் | சூ சந் சனி |
| புரே | 20 கா. 8.54 கடக-சந்<br>22 இ. 8.21 சிங் - சந்<br>24 பி.இ. 5.35 கன்-சந் | | செவ் |
| நேப் | | | குரு |
| | | கேது: | |

### மேடம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை 1 ஆம் பாதம்)



மேடராசியில் பிறந்தவர்களுக்கு குடும்பத்தில் ஒற்றுமையும், புரிந்துணர்வும் ஏற்படும். இனபந்துக்களிடையே ஒற்றுமை வலுப்படும். புத்திரர்களால் பெருமை சேரும். இல்லத்தில் சுபநிகழ்வுகள் ஏற்படலாம். தேகாரோக்கியம் நன்றாக இருக்கும். கொடுக்கல் வாங்கல் பிரச்சினைகள் இருப்பின் அவை தீரும். விவாக முயற்சிகள், தாமதமின்றிக் கைகூடும். வர்த்தகர்களுக்கு வியாபாரம் சிறப்பாக நடக்கும். தேங்கிக் கிடந்த பொருட்கள் விற்பனையாகி பணம் சேரும். புதிய முதலீடுகளுக்கும் நன்று. உத்தியோகத்தர்களுக்கு உயர்வும், நன்மையான மாற்றங்களும் ஏற்படலாம். அதிகாரிகளின் ஒத்துழைப்புக் கிடைக்கும். மாணவர்கள் கல்வியில் உற்சாகமாக ஈடுபடுவர். பரீட்சைகளில் வெற்றி கிட்டும்.

### இடபம்

(கார்த்திகை 2,3,4 ஆம் பாதங்கள், ரோகினி, மிரு



இடபராசியினருக்கு குடும்பத்தில் மனச் சந்தோஷம் குறைவாகவே இருக்கும். புத்திரர் களால் செலவினங்கள் ஏற்படலாம். வருவாயி லும் பார்க்க செலவு அதிகரிக்கும் குடும்பப் பெண்கள் சிக்கனத்தைக் கடைப்பிடிக்க வேண்டும். உடல் நலக்குறைவுகளும் இடையி டையே ஏற்படலாகும். கொடுக்கல் வாங்கல்களில் சிக்கல்கள் ஏற்படலாம். திருமணப் பேச் சுக்கள் வெற்றியளிப்பது கடினம். வர்த்தகர்களுக்கு வியாபாரம் மந்தநிலையிலிருக்கும். முதலீடுகள் தேங்கிக் கிடக்கும். உத்தியோகத்தர்களுக்கு வேலைப்பளு அதிகமாகும். உதவிகளும் கிடையாது. அதிகாரிகளாலும் தொல்லைகள் ஏற்படலாம். மாணவர்களுக்கு கல்வியில் மந்தநிலை காட்டும். தொழில் அனுகூலங்கள் கிடையாது.



### மிதுனம்

(மிருகசீரிடம் 3,4 ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ஆம் பாதங்கள் )

மிதுனராசியினருக்கு ஏழரைச் சனி நடுப் பகுதி நடக்கிறது. குடும்பத்தில் சச்சரவுகள் தோன்றி மறையும். புத்திரர்களால் தொல்லைகள் அதிகரிக்கும். தேகாரோக்கியம் இடையிடையே பாதிப்படையக்கூடும். செலவுகளும் அதிகமாகும். எடுத்த கருமங்களில் தடை, தாமதங்கள் காட்டும், திருமணப் பேச்சுக்கள் காலவரையறையின்றி தள்ளிப்போகும். வர்த்தகர்களுக்கு வியாபாரம் நட்டத்திலேயே நடக்கும். வங்கி உதவிகளும் தேவைக்குவராது. உத்தியோகத்தர்களுக்கு வேலை மாற்றங்கள் உண்டு. வருவாயும் குறைவு. மாணவர்கள் கல்வி யில் விசேட ஊக்கமெடுத்தல் வேண்டும்.

### கடகம்

(புனர்பூசம் 4 ஆம் பாதம், பூசம், ஆயிலியம்)



கடகராசியில் பிறந்தவர்களுக்கு ஏழரைச் சனி முற்பகுதி நடக்கிறது. குடும்பத்தில் நன்மையான பலன்கள் குறைவு. இனபந்துக்களிடையே சச்சரவுகள் தோன்றும். சுற்றாடலில் அமைதி இராது பெண்கள் ஆடம்பரச் செலவு செய்வதால் பணம் பற்றாக்குறை ஏற்படும். கொடுக்கல் வாங்கல் தொல்லைகளும் தலைதூக்கும். தேகாரோக்கியம் பாதிக்கப் படலாம். திருமணப் பேசுக்களில் திருப்தி வராது. வர்த்தகர்களுக்கு வியாபாரத் தில் எதிர்ப்புக்கள் சிக்கல்கள் தோன்றும். கூடன் உதவிகளும் கிடைப்பது கடினம். புதிய முதலீடுகளைத் தவிர்த்தல் நன்று. உத்தியோகத்தர்கள் வெகு சிரமத்துடன் பணியாற்ற வேண்டியிருக்கும். உயர்ச்சிகள், தடைப்படும். மாணவர்கள் உற்சாகத் து டன் செயற்பட்டாலும் நினைத்தபடி கருமங்கள் நடக்காது.

### சிங்கம்

(மகம், பூரம், உத்தரம் 1 ஆம் பாதம்)



சிங்கராசியில் பிறந்தவர்களுக்கு குடும்பத்தில் இல்லற சுகம் குறைவாகவே இருக்கும். புத்திரர்களால் சுகமுண்டு. இனபந்துக்களின் உதவி கிடைக்கும். திருமண முயற்சிகள் ஆமை வேகத்தில் நகரும், ஜன்ம வியாழன் நடப்பதால் தேகசுகம் குறைவு ஏற்பட இடமுண்டு. கொடுக்கல் வாங்கல்களில் அவதானம் தேவை. மருத்துவச் செலவுகளும் கூடுதலாகவே இருக்கும். வர்த்தகர்களுக்கு வியாபாரம் ஓரளவு லாபந்தரும். பொருள்வரவு நன்றாக இருக்கும். அழகு சாதனப் பொருட்கள் விற்பனை செய்வோர் கூடிய லாபமடைவர். உத்தியோகத்தவர்களுக்கு தொழிலில் வசதியான மாற்றங்கள் ஏற்படலாம். புத்தி சாதுர்யத்தால், தொழில் மூலம் நற்பெயர் பெறுவர். மாணவர்களுக்கு கல்வியில் சிறப்பு உண்டு. பலரது பாராட்டுக்களும் கிட்டும்.

### கன்னி

(உத்தரம் 2, 3, 4 ஆம் பாதங்கள், அத்தம், சித்திரை 1, 2 ஆம் பாதங்கள்)



கன்னிராசியில் பிறந்தவர்களுக்கு குரு 12 இல் சஞ்சரிப்பதால் குடும்பசுகம் மத்திமமாகும். பணச்செலவு அதிகம் ஏற்படும். தேகசுகம் இடையிடையே பாதிக்கப படலாம். பிரயாணங்களால் செலவு அதிகமாகும். மங்கல கருமங்கள தாமதமாகும். வெளியூரிலிருந்து நற்செய்தி கிடைக்கும். வர்த்தகர்களுக்கு வியாபாரத்தில் பணவிரயம், அலைச்சல் என்பன காட்டும். வாடிக்கையாளர்களைத் திருப்திப்படுத்துவதால் ஓரளவு நன்மை உண்டு. புதிய முதலீடுகளைத் தவிர்க்கவும். உத்தியோகத்தர் களுக்கு தொழில் உயர்ச்சி குன்றும். வேலைப் பளு அதிகமாகும். அதிகாரிகளின் வெறுப்பைத் தேட வேண்டியேற்படலாம். மாணவர்களுக்கு கல்வி மந்தமாக இருக்கும். சகமாணவர்களிடையே மனஸ்தாபம் ஏற்படலாம்.

### துலாம்

(சுவாதி , விசாகம் 1,2,3 ஆம் பாதங்கள் சித்திரை 3 ஆம், 4 ஆம் பாதங்கள்)



துலாராசியில் பிறந்தவர்களுக்கு குடும்பத்தில் வாக்குவாதங்கள் தோன்றி மறையும், வரவிலும் பார்க்க செலவு அதிகரிக்கும். தேகாரோக்கியம் இடையிடையே பாதிக்கப்படலாம். எனினும் பெரிதாக சுகவீனங்கள் ஏற்படாது. பிள்ளைகளாலும், உறவினர்களாலும் உதவி உண்டு. திருமணப் பேச்சுக்கள், தாமதத்தின் மேல் நிறைவு பெறும். வர்த்தகர்களுக்கு வியாபாரம் மந்தமாகவே நடக்கும். வங்கி உதவிகள் தாமதமாகவே கிடைக்கும். உத்தியோகத்தர்களுக்கு பணவிரயம் கூடுதலாக இருக்கும். வேலைப்பளுவும் அதிகமாகும். மாணவர்கள் முயற்சிக்கேற்ப முன்னேற்றம் காண்பர்.

### விருச்சிகம்

(விசாகம் 4 ஆம் பாதம், அனுஷம், கேட்டை)



விருச்சிகராசியில் பிறந்தவர்களுக்கு குடும்ப நிலை சுமாராக இருக்கும். பிரச்சினைகள் அதிகம் இருக்காது. பொருளாதாரம் தேவைகேற்ப கிடைக்கும். அடிக்கடி பிரயாணம் செய்ய நேரிடும். இதனால் செலவு அதிகமாகும். இன பந்துக்களிடையே கருத்து வேற்றுமை உருவாகலாம். திருமணப்பேச்சுகள் இழுபறியிலேயே இருககும். வர்த்தகர்களுக்கு வியாபாரம் சுமாராக நடைபெற் றாலும் பணம் சேருவது கஷ்டம். வியாபாரிகளுக் கிடையில் போட்டி பொறாமை ஏற்படலாம். உத்தி யோகத்தர்களுக்க கஷ்டப்பிரதேச மாற்றங்கள் கிடைக்கக் கூடும் தளர்வில்லாமல் உற்சாகத் துடன் பணியாற்ற நற்பலனுண்டாகும். மாணவர் களுக்கு கல்வியில் ஊக்கமிராது வீண்பொழுது போக்குகளில் ஈடுபடுவர்.

### தனுசு

(மூலம், பூராடம், உத்தராடம் 1 ஆம் பாதம்)



தனுராசியினருக்கு வாழ்கை யில் மகிழ்ச்சி நிலவும். பலவித முன்னேற்றங்கள் ஏற்படலாம். நற்காரியங்களால் மன நிறைவைக் கொடுக்கும். புத்திரர்களால் மன நிறைவைக் கொடுக்கும். வீட்டில் சுப நிகழ்வுகள் ஏற்படலாம். இன பந்துக்களின் வருகையால் வீடு கலகலப்பாக இருக்கும். மங்கல நிகழ்வுகள் விரைவில் கைகூடும். வர்த்தகர்களுக்கு வியாபாரம் சிறப்பாக வளர்ச்சியடையும். பணமும் சேரும். புதிய முதலீடுகளுக்கு நன்று. பவுண் வியாபாரிகள் சிறப்பாக லாபமடைவார். உத்தியோகத்தர்களுக்கு முந்திய கஷ்டங்கள் நிவர்த்தியடையும். செல்வாக்குப் பெருகும் மாணவர்களுக்கு கல்வி முன்னேற்றமுண்டு. உயர் கல்வி கற்க வாய்ப்புக்கள் கிடைக்கும்.

### மகரம்

(உத்தராடம் 2, 3, 4 ஆம் பாதங்கள் திருவோணம், அவிட்டம் 1, 2 ஆம் பாதங்கள்)



மகரராசியில் பிறந்தவர்களுக்கு நினைத்த கருமங்கள் தொடர்வதில் தாமதங்கள், தடைகள் ஏற்படலாம். குடும்பத்தில் கணவன் மனைவியிடையே சச்சரவுகள் ஏற்படலாம். தேகாரோக்கியத்தின் விளைவாகச் செலுத்த வேண்டிய பணச்செலவு அதிகமாகும்.பெண்கள் அடக்கத்தைப் பேண வேண்டும். இல்லையேல் மற்றவர்களுடன் உறவுகள் முறியடிக்க நேரும். திரு மணப் பேச்சுக்கள் காலந்தள்ளிப்போகும். வியாபாரிகளுக்கு நஷ்டமே கூடுதலாக இருக்கும். புதிய முதலீடுகளைத் தவிர்க்கவும், உத்தி யோகத்தர்களுக்கு வேலைப்பளு கூடுதலாக இருக்கும். உயர்ச்சிகள் பின்தள்ளிப் போகும். மாணவர்கள் விளையாட்டில் அதிக நாட்டங் கொள்வர்.

### கும்பம்

(அவிட்டம் 3, 4 ஆம் பாதங்கள், சதயம், பூரட்டாதி 1, 2, 3 ஆம் பாதங்கள)



கும்பராசியில் ஜனனமானவர்களுக்கு குரு பார்வையினால குடும்பத்தில்மகிழ்ச்சி, பூரிப்பு ஏற்படலாம். நினைத்த காரியங்கள் தங்குதடையின்றி நிறைவேறும், இனபந்துக்களிடையே ஒற்றுமைவலுக்கும். தேகாரோக்கியம் பாதிப்படையாது. பணவரவு திருப்தியாக இருக்கும். குடும்பப பெண்கள் மகிழ்ச்சியுடன் காணப்படுவர். திருமணப் பேச்சுகள் வெற்றி தரும், பிள்ளைக ளால் உதவி உண்டு வர்த்தகர்களுக்கு வியாபாரம் எதிர்பார்த்த லாபத்தைக் கொடுக்கும் நல்ல முன்னேற்றம் காண்பர். உத்தியோகத்தர்களுக்கு மேலிடத்தில் செல்வாக்கு வளரும். புதிய தொழில் வாய்ப்புக் களும் கிடைக்கும். மாணவர்கள் கல்வியில் சிறப் பான முன்னேற்றம் அடைவர். பாராட்டுக்களையும் பெறுவர்.

### மீனம்

(பூரட்டாதி 4 ஆம் பாதம், உத்தரட்டாதி, ரேவதி)



மீனராசியல் பிறந்தவர்களுக்கு குடும்பத் தில் சுமூகமான உறவுகள் தென்படாது. இடை யிடையே சிறு சச்சரவுகள் தோன்றும் பண வருவாய் ஓரளவு இருப்பினும், தேவையைப் பூர்த்தி செய்யப போதுமானதாக இராது. தேக சுகமும் பாதிப்படையலாம். பெண்கள் சிக்கனமாகவும் கௌரவமாகவும் நடந்து கொள்ள வேண்டும். திருமணப் பேச்சுககள் இழுபறி நிலையை ஏற்படுத்தும். கொடுக்கல் வாங்கல் பிரச்சினை தரும். வியாபாரிகளுக்கு பணவிரயம் களவு போன்றவற்றால் நட்டம் ஏற்படலாம் வியாபாரமும் மந்தநிலையைக் காட்டும். உத்தியோகத தர்களுக்கு செல்வாக்குக்குறையும். தொழில் மாற்றங்கள்சாதகமாக இராது மாண வர்களுக்கு முன்னேற்றம் குறைவு விளையாட்டுக்களால் உடல் நலம் குன்றும்.

---

ஒரு படைப்பாளியின் நினைவாக... பகுதி -6 - தி.ஞானசேகரன்

# மலையக இலக்கிய மறுமலர்ச்சியில் பங்காற்றிய எழுத்தாளர் கே.கணேஷ்

**முதுபெரும் எழுத்தாளரும் சிறந்த பத்திரிகையாளருமான கே.கணேஷ் அண்மையில் காலமானார் அவரின் நினைவாக இந்தக்கட்டுரை பிரசுரமாகின்றது.**

## கவிதைகள்:

1941 இல் கொழும்புத் துறைமுகத்தில் பெரியதொரு வேலை நிறுத்தம் ஏற்பட்டது. வேலைநிறுத்தத்தின்போது தொழிலாளருடன் இணைந்து தீவிரமாகச் செயலாற்றினார் கணேஷ் அக்காலகட்டத்தில் கணேஷ் அவர்கள் எழுதிய கவிதை 'ஹாபரிலே தொழிலாளி என்னும் கவிதையாகும். இக்கவிதை கப்பலில் வேலை செய்கின்ற தொழிலாளர்களின் பேச்சுவழக்கில் அவர்களின் இன்னல்களையும் ஓலக்குரல்களையும் மிக நயமாக வெளிப்படுத்தும் கவிதையாகும். இக்கவிதையிலே கவிஞர். தொழிலாளர்களில் தாமும் ஒருவராக நின்று குரல் கொடுக்கின்றார். இக்கவிதை கே.ராமநாதனை ஆசிரியராகக் கொண்ட நவசக்தி 21-09-41 இதழில் வெளியானது.

அடுத்து, கலாநேசன் என்ற புனைபெயரில் அவர் எழுதிய உழவன் வாழ்க்கை என்ற கவிதையும் முக்கியமானது. இக்கவிதையும் நவசக்தியிலேயே 1943 இல் வெளியானது. மாடுபோல் உழைத்தும் முன்னேற்றத்தைக் காணாத ஏழை உழவனது வாழ்க்கையின் இருள் சூழ்ந்த அவலத்தை இந்தக் கவிதையிலே காட்டியுள்ளார் கவிஞர்.

கணேஷ் அவர்கள் கவிமணி தேசிக விநாயகம்பிள்ளையின் கவிதைகளில் அதிக ஈடுபாடு கொண்டவர். கவிமணியின் கவிதைகளில் உள்ள கருத்துக்கள் கணேஷின் கவிதைக் கருத்துக்களிலும் ஆதிக்கம் செலுத்தியுள்ளன. கவிமணி தேசிக விநாயகம்பிள்ளையின் நினைவாக ஒரு கவிதையை ஆக்கியுள்ளார் கணேஷ். 'தேவியின் நாமம் தினம் வாழ்க' என்ற கவிமணி தேசிய விநாகயம் பிள்ளை நினைவஞ்சலிப் பாடல் 4-10-59 வீரகேசரியில் வெளியானது.

'அசோகமாலா' என்னும் நெடும்பா சாதி அகம்பாவத்திற்கெதிரான சாட்டையடியாக அமைந்துள்ளது. நாடகப் பண்புடன் கூடிய இந்த நெடும்பாவில் ஓசையொழுங்கு, எதுகை மோனை அமைப்பு, சொல்லாட்சி, வர்ணனைப் பண்பு, பொருத்தமான கற்பனைகள் எல்லாம் சிறப்புடன் அமைந்துள்ளன. துட்டகெமுனு மன்னனின் மகனான சாலியகுமாரன் கல்விகேள்விகளில் சிறந்தவனாகவும் பக்திமானாகவும் திகழ்ந்தான். அவன் சண்டாள இனத்தைச் சேர்ந்த அசோக மாலாவைக் காதலித்து மணந்தான். இக்காரணத்தால் அவனுக்கு அரசுரிமை இல்லாது போயிற்று. இக்கதையையே கவிஞர் கணேஷ் கவிதையில் வடித்துள்ளார். அசோக மாலா முதலில் வீரகேசரி வாரமஞ்சரியில் தொடராக வெளிவந்தது. பின்னர் சிறிலங்கா இதழில் 1963 இல் மறுபிரசுரம் பெற்றது.

இக்காலகட்டத்தில் 'என்ன சொல்லுவது?' (வீரகேசரி 3-5-1959) என்ற குழந்தைப்பாடல் ஒன்றையும் கவிஞர் கணேஷ் பாடியுள்ளார்.

1970 ஆம் [illegible] களை எழு[illegible] 'பொங்குக நல் பொங்கல்' (வீரகேசரி 12-1-71), 'விண்ணும் ...ர்ணும்' (மல்லிகை ஜனவரி- 1971), 'ஆடி அமர்ந்தேன்' (சிரித்திரன் மார்ச்-71), 'எல்லாம் இதற்காகத்தான்' (அஞ்சலி மே-1971), 'உள்ளும் புறமும்' (சிரித்திரன் ஆவணி-70), 'கலைப் பூசாரிகள்' (செய்தி 7-7-71), 'வேண்டுகோள்', 'மானுட அநீதி', 'காலங்கள்', 'நாங்கள் குழந்தைகள்' (வீரகேசரி 15-5-85), 'எங்கள் இலங்கை', 'ஈழத்தமிழர் சிறப்பு' (ஈழநாடு 2-5-59), 'வழிப் போக்கன்' (நோக்கு 1970) ஆகியவை முக்கியமானவை. இக்கவிதைகள் யாவும் சமூக முன்னேற்றத்தை அடிப்படையாகக் கொண்டே பாடப பட்டவை.

## கட்டுரைகள்:

கணேஷ் அவர்களின் கட்டுரைகள் எடுத்துக்கொண்ட விடயத்தை அழகாகவும் தெளிவாகவும் விளக்கம் கொடுப்பதுடன் படிப்பவரிடத்து சிந்தனையையும், அறிவையும் தூண்டுவனவாக அமைந்துள்ளன. இவர் தத்தமங்கலம் கணேசன் என்ற பெயரில் எழுதிய 'மகாசக்தி' என்ற கட்டுரை மணிக்கொடியில் (கொடி 7-மணி 7) வெளியானது. தினகரன் பத்திரிகையில் வெளிவந்த 'தொழில் விஞ்ஞானி - ஜி.டி.நாயுடு', 'அகில இந்திய எழுத்தாளர் தில்லை மாநாடு', 'பழுப்பு நிலக்கரி பரந்து கிடக்கும் நெய்வேலி' (9-4-54), 'அருணகிரி வழிவந்த அருட்கவி சேதுராமன்' (1958), 'கண்டி நடனம் (19-12-49 வீரகேசரி, சிறிலங்கா நவம்பர் 1959), 'பாரதத்தில் மின்னல் வேகத்தில் முன்னேறி வரும் எவரெஸ்ட் சாதனை' (வீரகேசரி), 'பஞ்சத்தில் தோன்றிய இயக்கம்' (தினகரன் 7-11-1968) ஆகிய கட்டுரைகள் முக்கியமானவை. [illegible] பத்திரிகையில் சித்தார்த்தன் என்ற புனைபெயரில் வெளிவந்த 'அறத்தின் அடிப்படையில் ஆட்சி வேண்டும்', குங்குமம் சஞ்சிகை ஜூன் 1969 இல் வெளிவந்த 'தமிழியல்', சித்தார்த்தன் என்ற புனைபெயரில் ஈழநாடு பத்திரிகையில் எழுதிய 'புரட்சிமிக்க தலைவரின் வாழ்க்கை - ஜெயப்பிரகாஷ் நாராயணன்', சௌமியம் சஞ்சிகையில் வெளிவந்த '30களில் கண்டி', அகிலம் இதழில் சித்தார்த்தன் என்ற புனைபெயரில் எழுதிய 'கண்டி வளர்த்த தமிழ்', யுகம் ஆவணி இதழில் வெளிவந்த 'சட்டமும் சந்தர்ப்பமும்', சிறிலங்கா சஞ்சிகையில் வெளிவந்த 'கண்டி நடனம்' (1959), 'அருட்கவி சேதுராமன்' (1958), சிரித்திரன் ஆவணி (1970) இதழில் வெளிவந்த 'உள்ளும் புறமும்', 'வரலாறு படைத்திடும் வையகம் தழுவிய சஞ்சிகைகள்' ஆகியவை சிறந்த கட்டுரைகள்.

இவற்றைவிட 1953 ஏப்ரல் முதல் ஆகஸ்ட் வரை 'பட்டிமன்றம்' என்ற தலைப்பில் தினகரன் பத்திரிகையில் பத்தி எழுத்துக்களையும் எழுதியுள்ளார் கணேஷ். 'குடும்பவாழ்வில் கணவன் மனைவியின் பங்கு', 'திரைப்பட உலகம்', 'யாப்பிலக்கணத்துக்கு கட்டுப்படாத நாட்டுப்பாடல்கள்', 'நாட்டு மொழிவளர்ச்சிக்குச் செய்தித்தாள்கள் நல்ல அளவுகோல்கள் என்ற தலைப்புகளில் நாட்டு நடப்புகள், சமூக விடயங்கள் இதில் அலசப்பட்டுள்ளன.

'உலகம் பலவிதம்' என்னும் நகைச்சுவை அம்சங்கள் நிறைந்த பத்தி எழுத்துக்கள், 'கணேசு' என்ற பெயரில் 1953 ஆம் ஆண்டில் ஏப்ரல் முதல் நவம்பர் வரை வீரகேசரியில் வெளியாகின. 'சிங்கபுரம்', 'சினிமா பார்க்கும் சுவை', 'மிஸ்டர் எதிர்காலம்', 'பிரேம சாகர்', 'பண்டிதர் மதியழகனாளார்', 'டூப்பிளிகேட் சந்த்', 'மிஸ்டர் ஜென்கிஸ்' என்பவை சமூக விடயங் களை ஆராய்கின்றன.

தென்னாலிராமன் கதைகளைப்போன்ற பல்கேரிய விகடன் பீட்டர் கதைகளை சிரித்திரன் டிசம்பர் 1971, ஜனவரி 1972, பெப்பிரவரி 1972, ஜூன் 1972, ஜூலை 1972 இதழ்களில் எழுதியுள்ளார்.

பல்கேரிய காப்ரோவியரின் சிக்கனம் குறித்த வேடிக்கைக் கதைகளையும் தமிழில் தந்துள்ளார் கணேஷ்.

உலகப் பெருந்தலைவர்கள், எழுத்தாளர்கள் பற்றிய அறிமுகக் கட்டுரைகளையும் கணேஷ் எழுதியுள்ளார். (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

சிந்தனைக்கு

*நன்றுஆற்றல் உள்ளும் தவறு உண்டு அவரவர்*
*பண்புஅறிந்து ஆற்றாக்கடை.*

திருக்குறள்

# நமது நோக்கு

## ஜனாதிபதியினதும் அரசினதும் கவனத்திற்கு ....!

இலங்கை அரசும், நிறைவேற்று அதிகார பலம் கொண்ட ஜனாதிபதியும் தமிழ் பேசும் மக்களின் தலையாய பிரச்சினைகள் மற்றும் அத்தியாவசிய அடிப்படை மனித உரிமைகள் தொடர்பான விடயங்களில் காட்டி வரும் அக்கறையின்மையுடன் கூடிய அலட்சியப்போக்கு, கடந்த இரண்டரை ஆண்டுகளுக்கும் மேலாகத் தொடரும் சமாதானச் சூழலை வெகுவாகப் பாதிக்கும் அபாயத்தை ஏற்படுத்திவருவதுடன், அதன் எதிர்காலத்தை இல்லாததொன்றாக்கி விடுமோ என பேரச்சத் தையும் ஏற்படுத்தத் தொடங்கியுள்ளது.

இலங்கையின் ஏனைய அனைத்துப் பிரச்சினைகளுக்கும் மூலாதாரமானதும், முக்கியமானதுமான பிரச்சினை இனப்பிரச்சினையேயாகும். இனப்பிரச்சினைக்கு நியாயமானதும், நிலையானதும், தமிழ் மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றி வைக்கக்கூடியதுமான ஒரு தீர்வை எட்டும்வரை ஏனைய பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பது முழுமையாகச் சாத்தியமாகாது என்பதுடன், நாட்டின் பிரதான இரண்டாவது பிரச்சினையான பொருளாதாரச் சிக்கலுக்கு முடிவுகாணவே முடியாது போய்விடும் என்ற அரசியல் யதார்த்த நிலையை அரசு புரிந்துகொண்டும், அதற்குரிய நடவடிக்கைகளை தேசிய அக்கறையுடன் மேற்கொள்ளத் தயங்குவது, ஜனாதிபதியின் அரசியல் சுயநலத்துடன் கூடிய வரட்டுத்தனமான அதிகார மேலாதிக்க சிந்தனையின் வெளிப்பாடேயாகும்.

முன்னர் ஐக்கிய தேசிய முன்னணி ஆட்சிக்காலத்தில் ஆரம்பமான சமாதான முயற்சிகள் இடைக்கால நிர்வாக அதிகார சபைக்கான விடுதலைப் புலிகளின் உத்தேச திட்டவரைபினை அப்போதைய அரசிடம் கையளிக்கும் நிலையைக் கடந்தபின்னரே, இன்றைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சியானது, இந்த திட்டவரைபு குறித்து பரிசீலிக்க முற்பட்டால், நாட்டின் பாதுகாப்புக்கும், ஒருமைப்பாட்டுணர்வுக்கும் பாதிப்பு ஏற்பட்டுவிடும் என்று நியாயமற்றதும் பொய்யானதுமான காரணத்தைக் கூறி அந்த ஆட்சியைக் கலைத்தது முதலே சமாதான முயற்சிகளுக்கு எதிராக ஒரு தீவிர நடவடிக்கைக்கு தன்னைத் தயார்படுத்திக் கொண்டார் என்றே கூறவேண்டும்.

ஓரளவுக்கேனும் ஆட்சியை அதற்குரிய ஐந்தாண்டு காலமும் முழுமையாக நடத்திமுடிக்கக்கூடிய அறுதிப் பெரும்பான்மைப் பலம் ஐ.தே.முன்னணிக்கு இருந்தும் கூட, ஆட்சிக் கலைப்பினை தனது அதிகார பலத்தினால் மேற்கொண்ட ஜனாதிபதி - தேர்தலுக்குப் பின் தற்போது சமாதான எதிர்ப்பு பேரினவாத கட்சிகளுடன் இணைந்து, அறுதிப் பெரும்பான்மை வலுவற்ற சிறுபான்மை அரசொன்றை நிறுவியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்தச் சிறுபான்மை வலுக்கொண்ட அரசு - எந்தவொரு தேசிய முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினைக்கும் தீர்வுகாணும் திராணி அற்ற ஒன்று என்பதும், எந்த விடயத்திலும் ஒற்றுமையுணர்வுடன் முரண்பாடுகளற்று, முடிவெடுக்கும் புரிந்துணர்வற்ற கூட்டுக்கட்சிகளின் இணைப்பில் உண்டான ஒன்று என்பதும் அண்மைக்கால அதன் நடவடிக்கை மூலம் புரிந்துகொள்ளக் கூடியதாக உள்ளது.

குறிப்பாக சமாதான முயற்சிகள் தொடர்பான விடயத்தில் அரசும், ஜனாதிபதியும் காட்டும் நேர்மையற்ற போலித்தனமும், இரட்டை அணுகுமுறையும் தமிழ் மக்களை தொடர்ந்தும் ஏமாற்றும் உத்திகளாகக் கொண்டதாகவே உள்ளது.

புதிய அரசு மேற்கொள்ளும்- அல்லது மேற்கொள்வதாகக் கூறிக்கொள்ளும் எந்தச் சமாதான முன்னெடுப்புக்களும், இடைக்கால நிர்வாக அதிகாரசபை தொடர்பான விடயத்திலிருந்தே ஆரம்பிக்கவேண்டுமென்ற விடுதலைப் புலிகளின் நிலைப்பாட்டை நிராகரிக்கவும் - ஏற்கவும் முடியாத ஜனாதிபதி, இப்போதே இறுதித் தீர்வு குறித்துப் பேசவும் நிபந்தனை விதிப்பது அர்த்தமற்றது.

ஒருபுறம் தமிழ் மக்களின் அன்றாட வாழ்வியல் பிரச்சினைகள் பல இன்னமும் யுத்தகால நிலையிலேயே உள்ளன.

உயர் பாதுகாப்பு வலய ஆக்கிரமிப்புப் பகுதிகளிலிருந்து இராணுவம் இன்னமும் வெளியேறவில்லை. வெளியேறும் எண்ணம் அவர்களுக்கு இருப்பதாகவும் தெரியவில்லை. வெளியேற்ற அரசு முயற்சிப்பதாகவும் தெரியவில்லை.

போரினால் அழியுண்ட பகுதிகளில் இன்னமும் புனரமைப்புப் பணிகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. புனர்வாழ்வுக்கான செயற்பாடுகள் எதுவும் அரசால் மேற்கொள்ளப்படுவதாகவும் இல்லை. அதற்கான நிதி வசதிகளும் அரசிடம் இல்லை.

இவற்றை வெளிநாடுகளின் உதவியுடன் மேற்கொள்ளமுடியும் என்றாலும், வெளிநாடுகள் சமாதானத்தின் அடிப்படையிலேயே நிதியை வழங்கத் தயாராக இருக்கின்றன.

இந்த அடிப்படைப் பிரச்சனைகள் - வாழ்வியல் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணவே திண்டாடும் அரசு, அரசியற் பிரச்சினைக்கு இறுதித்தீர்வுகாண வருமாறு அழைப்பதுதான் வேடிக்கையானது.

அரசின் இந்த நிலைப்பாடு சமாதானம் தொடரும் சாத்தியத்தை வெகுவாக சந்தேகிக்க வைக்கிறது.

இதன் காரணமாகவே நேற்று அரசின் உறுதியற்ற - நேர்மையற்ற போக்கைக் கண்டித்தும், ஐந்தம்சக்கோரிக்கைகளை முன்வைத்தும் யாழ்.மாவட்ட வெகுசன அமைப்புகளின் ஒன்றியம் ஒரு மாபெரும் பேரணியை நடத்தியது.

நியாயமான அவர்களின் கோரிக்கைகளுக்கு அரசோ, ஜனாதிபதியோ நியாயமான பதிலை தன்நெஞ்சறிய பொய்யின்றிக் கூற முன்வருவார்களா?


இதற்கான பதிலை காலம்தான் கூறவேண்டும்!

தமிழ் மக்கள் தமது பிரச்சினைகளை தாமே உணர்வெழுச்சி கொண்டு கிளர்ந்தெழுந்து, அணிதிரண்டு உரத்துக் குரலெழுப்பி கேட்கும் காலம் வந்துவிட்டது.

நியாயம் நிராகரிக்கப்பட்டு, அதர்மம் ஆதிக்கம் செலுத்த வெளிக்கிட்டால், அதன் பிரதிபலிப்பு எப்படி இருக்கும் என்பது அரசுக்கோ, ஜனாதிபதிக்கோ கடந்தகால வரலாறு கற்றுக் கொடுத்தே இருக்கும் என்பதில் ஐயமில்லை.

மீண்டும் பழைய ஒரு துயரமும், இருளும் மிக்க வரலாற்றை உருவாக்கும் பழிக்கு அரசும் - ஜனாதிபதியும் ஆழாக மாட்டார்களென நம்புவோமாக......!

## நாடும் நடப்பும்




# யாரையும் நோகடிக்கும் வகையில் அரச ஊடகங்கள் செயற்படவில்லை

## பிரதி அமைச்சர் இஸதீன் கூறுகிறார்

யாரையும் மனம் நோகடிக்கச் செய்யும் வகையில் அரச ஊடகங்கள் செயற்படவில்லை என ஊடகத்துறை பிரதி அமைச்சர் இஸதீன் தெரிவித்தார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் - அரச ஊடகங்கள் சமாதான முயற்சிகளைக் குழப்பும் வகையில் செயற்படுவதாக குற்றம் சுமத்தியிருப்பது குறித்து பி.பி.ஸி.க்கு பேட்டியளித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அதில் மேலும் தெரிவித்ததாவது -

தமிழீழ விடுதலைப்புலிகள், சமாதான முயற்சிகளைப் பாதிக்கச் செய்யும் வகையில், அரச ஊடகங்கள் செயற்படுவதாகக் குற்றச்சாட்டுக்களை முன்வைத்துள்ளனர்.

அரச ஊடகங்கள் எப்போதும் யாருக்கும் எதிராகவோ, யாரும் மன உளைச்சலடையும் வகையில் செய்திகளை வெளியிடுவதில்லை. சற்று அரச சார்புக்கொள்கை பின்பற்றப்பட்டாலும்கூட சமாதான முயற்சியைக் குழப்பும் வகையில் செயற்படமாட்டாது.

இது தொடர்பாக புதிய ஊடக அமைச்சர் மங்கள சமரவீரவுக்கு அறிவித்துள்ளேன். விரைவில் இந்த விடயம் தொடர்பான எமது நிலைப்பாட்டை வெளிப் படுத்துவோம்.

எமது ஊடகங்கள் சுயநலமற்றவகையில் செயற்படுபவை. எந்தவொரு குழுவுக்கோ, அரசியல் கட்சிக்கோ, ஆயுதக் குழுக்களுக்கோ அபகீர்த்தி விளைவிக்கக் கூடியவகையில் செயற்படுவதில்லை. ஊடக சுதந்திரத்தை நாம் எப்போதும் தவறாகப் பயன்படுத்தியதில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# குடாநாட்டில் டெங்குநோய் பரவும் அபாயம்! மக்களை விழிப்புடன் இருக்குமாறு எச்சரிக்கை

யாழ்ப்பாணத்தில் மீண்டும் டெங்கு பரவும் அபாயம் ஏற்பட்டிருப்பதால், பொதுமக்களை விழிப்புடன் செயற்படுமாறு யாழ். பல்கலைக்கழக சமூக மருத்துவப் பிரிவினர் அறிவித்துள்ளனர்.

அவர்கள் விடுத்துள்ள அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது - பகல்வேளைகளில் கடிக்கும் ஒருவகை நுளம்பினாலேயே இந்த டெங்குக்காய்ச்சல் பரவுகிறது. இதனைத் தடுப்பதற்கு டெங்கு நோயாளிகளை மிகவும் சிரத்தையுடன் கவனித்துக்கொள்வதுடன், நுளம்பு பெருகுமிடங்களை அழித்தல் வேண்டும்.

ஒருவருக்கு காய்ச்சல் ஏற்பட்டால், அது தொடர்பாக வைத்தியசாலைகளை அணுகுவதுடன் சிகிச்சையளிக்க முற்படவேண்டும்.

இது ஒரு பாரிய உயிர்கொல்லி நோயாக இருப்பதால், மக்கள் இந்த விடயம் தொடர்பாக உரிய கவனம் செலுத்த வேண்டும். பற்றைகளைச் சுத்தம் செய்து, பாவனையற்று வீணாகத் தேங்கிநிற்கும் தண்ணீர்களை இல்லாது செய்து, உறங்கும்போதும், இரவில் கடமைகளை மேற்கொள்ளும்போதும் மக்கள் தமது நலனைப் பாதுகாக்கும் வகையில் நுளம்பிலிருந்து பாதுகாப்பைத் தேடிக்கொள்ளவேண்டும்.

தென்னிலங்கையில் அதிகரித்திருக்கும் டெங்குக் காய்ச்சல் இங்கும் பரவாது தடுக்கவேண்டிய பாரிய பொறுப்பு எமது பிரதேசங்களிடம் உண்டு எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கொழும்பு கிராண்ட்பாஸ் பகுதியில் தற்கொலை அங்கிகள் மீட்பு

கொழும்பு கிராண்ட்பாஸ் பகுதியின் பிறின்ஸ்வேல்ஸ் பகுதியில் கைக்குண்டுகள் இரண்டு மற்றும் தற்கொலை அங்கிகள் இரண்டு என்பவற்றை கைப்பற்றியுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று அதிகாலை 3.30 மணியளவில் நடத்தப்பட்ட தேடுதலின் போதே இவை கைப்பற்றப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

விசேட அதிரடிப்படை இராணுவத்தினர் உட்பட விசேட அணி இது தொடர்பான பரிசோதனைகளையும், விசாரணைகளையும் மேற்கொண்டு வருகின்றனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் சந்தேகநபர்கள் எவரும் [illegible]. கடந்த மூன்று மாதங்களுக்குள் கொழும்பில் [illegible] குண்டுகள், அங்கிகள் மீட்கப்பட்ட சம்பவம் இதுவாகும்.

# யாழ்ப்பாண பொது நூலகம் மக்கள் பாவனைக்கு

யாழ்.பொது நூலகம் திங்கள் மற்றும் பொது விடுமுறை நாட்கள் தவிர்ந்த ஏனைய நாட்களில் காலை 10 மணி முதல் மாலை 6 மணி வரை பொதுமக்கள் பாவனைக்காகத் திறந்து விடப்பட்டுள்ளது.

நூலகத்தின் சகல பிரிவுகளும் பாவனைக்காக விடப்பட்டுள்ளது. வாசகர்கள் பதிவுசெய்து, நூல்களை இரவல் பெறலாம்.

குறைந்த கட்டணத்தில் இன்ரநெற் வசதிபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ஒரு மணித்தியாலம் பயன்படுத்த 30 ரூபா கட்டணமாக அறவிடப்படும்.

நூலகத்தில் 80 ஆசனங்களைக்கொண்ட கேட்போர்கூடம் நவீன வசதிகளுடன் இருக்கின்றது. இது கல்விசார் நடவடிக்கைகளுக்காக வாடகைக்கு விடப்படும். இவற்றைவிட வடியோக் காட்சி பார்ப்பதற்கும், ஒலிநாடாக்கள் கேட்பதற்கும் தனித்தனியாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக மாநகர ஆணையாளர் சி.இராமலிங்கம் தெரிவித்தார்.

# யாழ்.குடாநாட்டில் மீண்டும் பழைய கோட்டு வியாபாரம்

(யாழ்ப்பாணம்)

பழைய கோட்டு வியாபாரம் மீண்டும் யாழ்.நகரப் பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வருவதை அவதானிக்க முடிகிறது.

பழைய சாறிகள், சட்டைகள், கோட், சூட் முதலானவற்றைப் பெற்றுக்கொண்டு அதற்குப் பதிலாக புதிய சில்வர்ப் பாத்திரங்களை வழங்குவதே இந்த வியாபாரமாகும்.

ஏ-9 பாதை திறக்கப்பட்டவுடன் இந்த வியாபாரம் சூடுபிடித்திருந்தபோதிலும், கடந்த சில மாதங்களாக ஓய்ந்திருந்த இந்த 'பழையகோட்டு வியாபாரம்' மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த வியாபாரத்தில் தமது பழைய துணிவகைகளைக் கொடுத்துவிட்டு, புதிய சில்வர்ப் பாத்திரங்களைக் கொள்வனவு செய்வதில் அதிகளவிலான மக்கள் ஆர்வத்துடன் ஈடுபட்டு வருவதனைக் காணமுடிகின்றது.

யாழ். நகரை அண்டிய பகுதிகளிலும், நகரின் புறநகர்ப் பகுதிகளிலும் இத்தகைய வியாபாரிகளைக் காணமுடிகின்றது. இந்த வியாபாரத்தில் தென்னிலங்கையிலிருந்து வரும் சிங்களவர்களும், இந்திய வம்சாவழியைச் சேர்ந்த தமிழர்களும் ஈடுபட்டு வருவதனைக் காணமுடிகின்றது. (ப)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வல்லையூரான்

# ஒரு செங்கோலின் கதை

## அல்லது ஒரு சண்டைப்படம்

*"இதோ புத்தபிக்குகளைத் தாக்குகிறார்கள்"*

*"அதோ அதோ செங்கோலுடன் அவர்கள் ஓடுகிறார்கள்"*

கடந்த 8 ஆம் திகதி கொழும்பு ஜயவர்த்தனபுர நாடாளுமன்றத்தில் அரங்கேற்றப்பட்ட சண்டைப்படத்தின் வசனங்களே இவை. இச்சண்டைப் படத்தின் பாத்திரங்களான நாடாளுமன்ற அமைச்சர்கள், உதவி அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் எனப்பலரும் பங்கேற்றுத் தத்தம் பாத்திரங்களைக் கனகச்சிதமாய்ச் செய்திருந்தனர்.

துகிலுரியும் காட்சி, கடத்தல் நாடகங்கள், இழுபறிகள், அனல்கக்கும் வசனங்கள் என படம் தொடங்கிமுடியும்வரை நிமிடத்திற்கு நிமிடம் காட்சிகள் விறுவிறுப்பாக இடம் பெற்றிருந்தன. விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் ஜீவன் குமாரதுங்க சிங்களத் திரையுலகின் ஒரு பிரசித்தி பெற்ற நடிகரும்கூட. அவர் திரைப்படங்களில் அதிகமாகப் பங்கேற்பது சண்டியன் பாத்திரமாகவே.

அன்றைய 'செங்கோலின் கதை' திரைப் படத்திலும் அவர் சண்டியன் பாத்திரம் ஏற்று தனது கதாபாத்திரத்தைத் திறம்படச் செய்திருந்தார். அவரோடு உப பாத்திரங்களில் தோன்றியவர்களில் மஹிந்தானந்த அளுத்கமகே, தான் ஏற்றிருந்த பாத்திரத்தினை பலரும் வியக்கும்வண்ணம் செய்துமுடித்து அரச தரப்பினரின் அமோக ஆதரவினைப் பெற்றுக்கொண்டார்.

அவர் செங்கோலை லாவகமாகத் தூக்கிச சென்ற காட்சி, இராமாயணத்தில் வரும் ஒரு குணச்சித்திர பாத்திரத்தை ஒத்திருப்பதாக பார்வையாளர் கலரியில், எனக்கு சமீபமாக அமர்ந்திருந்த தாய்க்குலத்தின் பிரதிநிதி ஒருவர் குறிப்பிட்டார்.

இனி செங்கோலின் கதை திரைப்படக் காட்சிக்கு வருவோம். காலை 10 மணிக்கு காட்சிகள் ஆரம்பமாகின. வழமைபோல செங்கோலினை தனது வலப்புறத் தோளில் ஏந்தியவண்ணம் நாடாளுமன்ற சேவிதர் முன்னேவர, அவரின் பின்னால் பரிவாரங்கள் புடைசூழ சபாநாயகர் டபிள்யூ.ஜே.எம். லொக்கு பண்டார வருகைதந்து தனது ஆசனத்தில் அமர்ந்தார்.

நிகழ்ச்சி நிரலின்படி அன்று நான்கு புதிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் சத்தியப்பிரமாணம் செய்வதற்கு தீர்மானம் செய்யப்பட்டிருந்தது. சபாநாயகர் - அக்மீமன தயாரத்ன தேரரை சத்தியப்பிரமாணம் செய்யவருமாறு அழைப்பு விடுத்ததனைத் தொடர்ந்து, அரசாங்க தரப்பிலிருந்து எதிர்க்குரல்கள் எழும்பத் தொடங்கின.

தயாரத்தின தேரர் பதவிப்பிரமாணம் செய்துகொள்வதற்கு நீதிமன்றம் தடைவிதித்திருப்பதைச் சுட்டிக்காட்டி, ஜெயராஜ் பெர்ணாண்டோ புள்ளே, விமல் வீரவன்ஸ, ஜோன் செனவிரத்ன ஆகியோர் எதிர்ப்புத் தெரிவித்தனர். நீதிமன்ற அறிவிப்பு தனக்குக் கிடைக்கவில்லை எனப்பதில் தெரிவித்த சபாநாயகர் அரச தரப்பினரின் பலத்த கூக்குரல்களுக்கு மத்தியில் தேரரை சத்தியப்பிரமாணம் செய்யவருமாறு அழைத்தார்.

அந்த அழைப்பினைத் தொடர்ந்து சண்டைப் படத்தின் முதலாவது காட்சி ஆரம்பமாகியது. திரைப்படங்களில் சண்டியனாகப் பாத்திரமேற்றுப் பழகிப்போன அமைச்சர் ஜீவன் குமாரதுங்க மிகுந்த வேகத்தோடு முன்னர் பாய்ந்தார். சத்தியப்பிரமாணம் செய்வதற்கு அழைக்கப்பட்ட தேரரை அழைத்துக் கொண்டு செங்கம்பளத்தினூடாக சபாநாயகரின் ஆசனத்திற்கு அண்மையில் செல்வதற்கு நாடாளுமன்றத்தின் பிரதான சேவிதர் விஜயபற்றியகுருகே ஆயத்தமாகி பாதங்கள் இரண்டையும் முன்னே வைத்ததும்தான் தாமதம், முன்னால் பாய்ந்துவந்த ஜீவன் குமாரதுங்க தனது இருகரங்களையும் அகல விரித்துக் குறுக்கே மறித்து அந்த வழியைத் தடைசெய்தார்.

அதன் பின்னர் இரண்டாவது காட்சி ஆரம்பமாகியது. ஜீவன் குமாரதுங்கவைப் பினபற்றி ஜே.வி.பி அமைச்சர்களும், நாடாளுமன்ற உறுப்பினர்களும், ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் சில அமைச்சர்களும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் சபையின் மத்திக்குத் தாவிப்பாய்ந்து வந்து சேர்ந்தார்கள். அவர்களைப் பின்தொடர்ந்து ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களும் சபையின் மத்திக்கு வந்தார்கள்.


அவ்வேளையில் அன்று வழக்கத்தை விட, நாடாளுமன்ற கலரி பெருந்திரளான பள்ளிப் பிள்ளைகளும் பொதுமக்களும் என நிரம்பி வழிந்துகொண்டிருந்தது. அன்று அங்கு வந்திருந்த அனைவருக்குமே உயிர் உள்ளவரை மறக்கமுடியாத ஒரு விசித்திர அனுபவமாக அது இருந்திருக்குமென்பதில் எவ்வித ஐயமும் இருக்கமுடியாது.

ஜே.வி.பியினர், ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியினர் மற்றும் ஐக்கிய தேசிக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களிடையே நடுவில் சிக்குண்ட தயாரத்ன தேரர் இழுபடத் தொடங்கினார். தி.மகேஸ்வரன், நவீன் திஸநாயக்க, மஹிந்த சமரசிங்க உள்ளிட்ட எதிர்க்கட்சிப் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தேரரை சபாநாயகரின் இடத்திற்கு அழைத்துச்செல்வதற்கு கடும் பிரயத்தனப்பட்டார்கள்.

அந்த இழுபறிக் காட்சிகள் இடம்பெற்ற வேளை ஏனோ தெரியவில்லை பிரதம அமைச்சர் சபையில் இருக்கவில்லை.

'அதோ அதோ செங்கோலை எடுத்துக் கொண்டு ஓடுகிறார்' என சபாநாயகரின் குரலைக்கேட்டு என்போன்ற ஊடகவியலாளர்களின் பார்வைகள் அந்தப் பக்கம் திருப்பின.

பிரதி அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமமே, இராமாயணத்தில்வரும் அனுமந்தனை நினைவுபடுத்தும் வகையில் செங்கோலைச் சுமந்தவண்ணம் சென்றுகொண்டிருந்தார். அவர்பின்னால் நாடாளுமன்ற உதவிச் சேவிதர், எப்படியாவது அதனை மீட்டெடுத்துவிட வேண்டும் என்பது அவரது எதிர்பார்ப்பு.



"என்னிடமிருந்த செங்கோலைக் கைப்பற்ற முனைந்தால், அதனை நிலத்தில் அடித்து நொருக்குவேன்' அளுத்கமகேயின் அந்தக் கர்ஜனை உதவிச் சேவிதரை செயற்படவிடாமல் செய்துவிட்டது.

செங்கோல் மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.சுபசிங்கவிடம் கையளிக்கப்பட்டது. அரசதரப்பு அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் வட்டமாக நின்று செங்கோலுக்கு பாதுகாப்பு வழங்கினார்கள்.

"இங்கிலாந்து நாடாளுமன்றத்தில் ஒரு தடவை செங்கோலைத் தூக்கி தேம்ஸ் நதிக் கரையில் வீசிவிட்டார்கள். 3 நாட்களுக்குப் பிறகே அதனைத் தேடிக்கண்டுபிடிக்க முடிந்தது. 3 நாட்கள்வரை நாடாளுமன்றம் கூட முடியாமல்போனது. இங்கும் இந்தச் செங்கோலை யாராவது பக்கத்தில் ஓடிக்கொண்டிருக்கும் வாவியில் வீசி எறிந்துவிட்டால் அதனைக் கண்டுபிடிக்கும்வரை நாடாளுமன்றத்தைக் கூட்டமுடியாது என்று அங்கு வந்த மங்கள சமரவீர எச்சரிக்கை செய்தார். அதன பின்னும் அங்கு நிற்பதற்கு உதவிச் சேவிதருக்கு பைத்தியமா என்ன?

இந்த இடைவேளைக்குள் எதிர்க்கட்சியினர் தேரரை எப்படியோ சபாநாயகரின் இருக்கைக்கு முன்னால் கொண்டுவந்துவிட்டார்கள்.

"செங்கோல் . இல்லை..... என்ன செய்வது....?

"கொடுங்கோல் ஆட்சி நடைபெறும் இடத்தில் செங்கோல் வேண்டியதில்லை. நாடாளுமன்றத்தை நடத்துங்கள்" தனது வழமையான பாணியில் சிவாஜி உறுமுகின்றார்.

சத்தியப்பிரமாணம் செய்விப்பதற்கான முயற்சியில் சபாநாயகரும், எதிர்க்கட்சிப் நாடாளுமன்ற உறுப்பினர்களும்.

"இங்கே தேரர்களைத் தாக்குகின்றார்கள்" எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சத்தமிடுகின்றார்கள். துகிலுரியும் காட்சி, பிடிக்கக்கூடாத இடத்தில் அழுங்குப் பிடிகள்... அவலக்குரல்கள்..... இத்யாதி, இத்யாதி.... செங்கோல் இன்றியே சத்தியப்பிரமாணம் செய்விக்கின்றார். சபாநாயகர். எதிர்க்கட்சி வரிசை நாடாளுமன்ற உறுப்பினர்களின் கரவொலிகளின் மத்தியில் தேரர் சத்தியப்பிரமாணம் செய்துவிட்டு தனக்கென ஒதுக்கப்பட்டிருந்த ஆசனத்தில் வந்தமர்கின்றார்.



தொடர்ந்து நாடாளுமன்றத்தைக் கொண்டு நடத்துவதன் பொருட்டு, செங்கோலைக் கொண்டுவருமாறு மீண்டும், மீண்டும் பல தடவைகள் சபாநாயகர் அழைப்பு விடுக்கின்றார். எதுவித பலனும் இல்லை. இதற்கிடையில் நிகழ்ச்சிகளைப் படம்பிடித்துக்கொண்டிருந்த வீடியோ படப்பிடிப்பாளர்கள், பத்திரிகையாளர்கள், பார்வையாளர்கள் என அனைவரும் வெளியேற்றப்படுகின்றார்கள். நாடாளுமன்றம் தற்காலிகமாக ஒத்திவைக்கப்படுகின்றது.

10.20 க்கு காணாமற்போன செங்கோல் மீண்டும் தனது இருப்பிடத்திற்கு வந்துசேர்ந்தது பிற்பகல் 2.30 மணிக்கே.

செங்கோல் அடைந்த வேதனையைக் கண்ணுற்றோ என்னவோ அதற்கு ஓய்வுகொடுக்க வேண்டும் என்ற எண்ணத்திற்போலும் ஜூலை 20 ஆம் திகதிக்கு நாடாளுமன்ற அமர்வினை ஒத்திவைத்துவிட்டார். சபாநாயகர்.

---

செய்திக் கட்டுரை

ஜெயா

# பொழுதுபோக்கு மையங்களாகும் கோவில்களும் களியாட்ட விழாக்களாகும் திருவிழாக்களும்



இந்து ஆலயங்களும் அங்கு நடைபெறும்விழாக்களும் தொடர்ந்து செல்லும்ஒரு களியாட்ட நிகழ்வாகவே காணப்படுகின்றன. வசந்த கால வரவைத் தொடரந்து திருவிழாக்கள் ஆலயம் தோறும் களைகட்டத் தொடங்கியுள்ளன.

இங்கு ஆலயம் என்பது ஆன்மாக்கள் இலயிக்குமிடம் என்றே இந்து மதம் பொருள் கூறுகின்ற போதும், நிகழ்காலத்தில் அங்கு நடைபெறும் சம்பவங்கள் அனைத்தும் ஆன்மாக்களை அகந்தை கொள்ளுமிடமாகவே மாற்றியுள்ளது எனலாம்.

அதாவது போட்டி அடிப்படையில் பல இலட்சம் ரூபாக்களைச் செலவுசெய்து ஆடம்பரத் திருவிழாக்களை நடாத்துகின்றனர். இவர்கள் இங்கு சிந்திக்க வேண்டிய பலவிடயங்கள் உண்டு.

எமது மண்ணிலே பல்லாயிரக் கணக்கான மக்கள் போரின் வடுவினால் பாதிக்கப்பட்டு, புனர்வாழ்வு வேண்டிநிற்பதோடு, எமது மண் விடுதலை வேண்டியும் காத்திருக்கும் தருணத்தில் - வீண் செலவுகள் பலவற்றைத் தவிர்த்து பயனுள்ள பல நடவடிக்கை[illegible] பயன்படுத்தலாமே.

இதேபோல, இத்தகைய பெரு நிதி வளத்தினைக் கொண்டுள்ள ஆலயங்கள் பொது வசதிகளை மக்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்கும் தர்மப்பணியில் ஈடுபடலாம்.

இதற்காக ஆலயத்திருவிழாவினை நிறுத்த வேண்டும் என்பதில்லை. அதனை மட்டுப்படுத்தி, எளிமையாக கொண்டாடி மீதப்படுத்தப்பட்ட நிதியினை மீள் பயன்பாடு செய்யலாம் என்பதே பொதுவான கருத்தாகும். மேலும், ஆலயங்கள் பலவற்றில் பல கிலோமீற்றர் தொலைவுகாண ஒலிபெருக்கிகளைக் கட்டியும், அதிலிருந்து அதிகளவு ஒலியினை வெளிப்படுத்தியும் பொதுபோக்கு மற்றும் சமூக அமைதி என்பவற்றுக்கு பங்கம் ஏற்படுத்துகின்றனர்.

இதன்மூலம் விபத்துக்கள் அதிகரிப்பதுடன் நோயாளிகள் பலமான உளத்தாக்கத்திற்கு ஆட்படுவதோடு, மாணவர்கள் தமது கற்றல் செயற்பாடுகளை மேற்கொள்வது கடினமாக அமைகின்றது.

இதேபோன்றே இசைக்குழுக்கள்மூலம் - கீழ்த்தர சினிமா இசைகளை ஆலயங்களில் இசைப்பதுடன் மது அருந்திய இளவட்டங்கள் ஆடல்களில் ஈடுபட்டு பெரும் கலாசார சீரழிவை ஏற்படுத்துகின்றனர். இத்தோடு ஆலயங்களில் நடைபெறும் [illegible] திருவிழாக்களில் பல ஆண்கள் தங்களது கீழ்த்தர ஆசைகளை நிறைவேற்ற பெண்கள் வேடமிட்டு ஆடுவதோடு இடையிடையே பெண்கள் பகுதிக்குள் உள்நுழைந்து தமது அட்டகாசத்தினையும் வெளிப்படுத்துகின்றனர்.

இத்தகைய சீரழிவுப் போக்கை கட்டுப்படுத்த வேண்டிய முக்கிய பொறுப்பு அந்த ஆலய தர்மகர்த்தாக்களையும், பிரதம குருமாரையும் சார்ந்ததாகும். சில ஆலயங்களிலே வசந்தமண்டப பூசை முடிந்த பின் - சுவாமி வீதி உலா செல்வதற்கிடையில் அந்தந்த திருவிழா பற்றிய விளக்கங்களும் அதனூடான ஒழுக்கக் கோட்பாடுகளும் தமிழில் விரிவுரையாக ஆலய பிரதம குருவினால் மேற்கொள்ளப் பட்டதையிட்டு வியப்படைந்தேன்.

இந்தப் போதனை குறிப்பிட்ட ஒரு குழுவினால் மட்டுமே அவர் தான செல்லும் ஆலயங்களில் மேற்கொள்வதை அறிந்தபோது, இப்படி ஏன் மற்றைய குருமார்களும் செயற்படக்கூடாது என்ற வினா எனக்குள் எழுந்தது இதற்குரிய தகுதியினை அவர்களும் கொண்டிருக்கவேண்டியது முக்கியமாகும்.

ஆலயக் குருத்தொழிலானது ஊதியத்திற்காக மட்டும் செய்யப்படுவதொன்றல்ல. என்பதோடு, இது மிகவும் சமூகப்பொறுப்பு வாய்ந்தது என்பதையும் சம்பந்தப்பட்டவர்கள் புரிந்துகொள்ளல் அவசியமாகும்.

இத்தருணத்தில் தமிழராகிய நாம், சிந்திக்கவேண்டியது எமது ஈழத்தமிழ் சமூகம் (புலம்பெயர்ந்தோர் உட்பட) ஏறக்குறைய ஒரு கோடி என எடுத்துக்கொள்வோம் ஆயின், நாம் ஒவ்வொருவரும் ஒரு மாததிற்கு ஒரு ரூபாய் உண்டியலில் இட்டோமாயின் ஒரு வருடத்தில் பன்னிரண்டு கோடி ரூபாய் தேறும்.

இவ்வாறே ஆலயங்களிலும் பெருவாரியான நிதி சேகரிக்கப்பட்டு அது ஒழுங்குபடுத்தப்பட்ட முகாமைத்துவம் இன்மையால் வீணே செலவாகின்றது. அதாவது, இருந்த ஆலயத்தை இடித்துக்கட்டுவது, புதிய ஆலயத்தை நிர்மாணிப்பது, சாதிக்கு ஒரு கோயில், ஆளுக்கு ஒரு கோயில் என கட்டுவது போன்ற நடவடிக்கையால் பொருளாதார இழப்பு ஏற்படுகின்றது.

அவ்வாறெனில் ஆலயம் கட்ட வேண்டாம் என்றில்லை. இருக்கும் ஆலயத்தினை இடிக்காது அதனை பராமரித்தாலே போதுமானதாகும். ஏனெனில் எமது நாட்டிற்கு வேண்டிய அபிவிருத்தித் தேவைகள் பல உள்ளன.

இவ்வாறு நாம் எதிர்காலத் தேவையினை இன்றே உணர்ந்து செயற்படுவதனுடாக எதிர்காலத்தில் எந்த நாட்டினது உதவிக்கும் கையேந்தாது எம்மை நாமே எமது நிதிகொண்டு அபிவிருத்தி கண்டுவிடலாம்.

இதேபோன்று ஆலயங்களும் தமது வரையறைக்குள் நின்று செயற்பட்டு சிறந்த சமூகமயமாக்கல் களங்களாக மாற்றங்கண்டு புதியதொரு யுகத்தினைப் படைக்க வேண்டும். இதற்காகத் தர்மகர்த்தாக்கள், ஆலயக்குருக்கள், அடியார்கள் என்போர் தம்மை அர்ப்பணித்து செயற்படுதல் மிகமிக அவசியமானதொன்றாகும்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

### பாக்தாத் இராணுவ ஆட்சேர்ப்பு நிலையத்தில்

# கார்க்குண்டுத் தாக்குதலில் 38 பேர் பலி 100 க்கு மேல் காயம்



பாக்தாத்தின் மேற்குப் பகுதியினருகே உள்ள ஈராக்கிய இராணுவத்துக்கு ஆட்சேர்க்கும் முகாம் ஒன்றில் இடமபெற்ற கார்க் குண்டு வெடிப்பில் 38 பேர் கொல்லப்பட்டனர்.

பாக்தாத்தின் பழைய விமான நிலையத்தினுள் உள்ள இந்த முகாமினுள், ஈராக்கிய இராணுவத்தில் இணைந்துகொள்வதற்காக நூற்றுக்கு மேற்பட்டவர்கள் வரிசையாக நின்றவேளையிலேயே தற் கொலைக் குண்டுதாரி காரினை ஓட்டிவந்து குண்டினை வெடிக்க வைத்தார்.

இந்தத் தாக்குதலின்போது 100 க்கும் மேற்பட்டவர்கள் படுகாயமடைந்துள்ளதாகவும், அவர்களில் பெரும்பாலானவர்களுடைய நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாகவும் வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

காயமடைந்தவர்கள் பாக்தாத் நகரத்தில் உள்ள இரண்டு வைத்தியசாலைகளில் அனுமதிக்கப் பட்டுள்ளதாகத் தெரிவித்த வைத்திய அதிகாரிகள் இறந்தவர்களுடைய எண்ணிக்கை அதிகரிக்கலாம் எனத் தெரிவித்தனர்.

இதுதொடர்பாக கருத்துத் தெரிவித்த ஈராக்கிய இராணுவ அதிகாரி, தமது குடும்ப வறுமைநிலை காரணமாக ஈராக்கிய இராணுவத்தில் இணைந்துகொள்ள வந்தவர்களே இந்தத் தாக்குதலில் இறந்ததாகத் தெரிவித்தார்.

கடந்த 5 மாதங்களுக்கு முன்னர் இந்த முகாமில் இடம்பெற்ற இராணுவத்துக்கு ஆட்சேர்க்கும் நடவடிக்கையின்போது மேற்கொள்ளப்பட்ட கார்க் குண்டுத் தாக்குதலில் இராணுவத்தில் இணையவந்த 47 நபர்கள் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இந்தத் தாக்குதல்கள் மூலம் யூன் முப்பதாம் திகதி இடைக்கால அதிகாரசபை ஈராக்கிடம் ஒப்படைப்பதென்பதில் எந்தவித தாக்கத்தையும் ஏற்படுத்தமாட்டாதென பிரிட்டன் வெளியுறவுச் செயலர் ஜக்ஸ்ரோ தெரிவித்தார்.

# உயர்ந்த மனிதர்களாக மாறும் வியட்நாம் மக்கள்



முன்பு ஜப்பான் மக்கள் உயரம் குறைந்தவர்களாக இருந்தனர். இப்போது ஜப்பான் மக்கள் சராசரி உயரத்துக்கு வந்துவிட்டனர். இப்போது வியட்நாம் மக்கள் தாங்கள் உயரமாக வரவேண்டும் என்று விரும்புகிறார்கள். அங்கு சராசரியாக மனிதர்களின் உயரம் 162 செ.மீ ஆகும். 2010 ஆம் ஆண்டுக்குள் 165 செ.மீ உயரம் உள்ளவர்களாக மாற வியட்நாமியர்கள் விரும்புகிறார்கள். இதற்காக சிறப்பு உடற்பயிற்சிகளை செய்கிறார்கள்.

பிளாட்பாரங்களில் இதற்காக உடற்பயிற்சி சாதனங்களும், உடல் எடை, உயரம் பார்க்கும் கருவிகளும் உள்ளன. தள்ளுவண்டிகளிலும் இந்தக் கருவிகள் நகரை வலம் வருகின்றன. அறிவிலும்,




வீரத்திலும், உழைப்பிலும் உயர்ந்த வியட்நாம் மக்கள் ஆளும் வளரணும், அறிவும் வளரணும் என்பதைப் புரிந்துகொண்டுள்ளார்கள்.


# நேற்றைய கண்டனப் பேரணிக் காட்சிகள்



பேரணியில் கலந்துகொண்டோர்



அணிதிரண்டிருந்த மாணவர் கூட்டம்.



பேரணியில் கலந்துகொண்ட இன்னோர் பகுதியினர்




கண்டி வீதியூடாக வரும் மக்கள் கூட்டம்




பேரணியில் கலந்துகொண்ட ஆசிரியர் கூட்டம்



யு.என்.எச்.சி.ஆர் பிரதிநிதியிடம் மகஜர் கையளிக்கப் படுகிறது.



பிரதமருக்கான மகஜர் யாழ்.செயலக உதவி அரசாங்க அதிபர் வீரகத்திப்பிள்ளையிடம் கையளிக்கப்படுகிறது.



ஐ.சீ.ஆர்.சி பிரதிநிதியிடம் தேசிய எழுச்சிப் பேரவையைச் சேர்ந்த கனகலிங்கம் மகஜர் கையளிக்கிறார்.



திட்டப்பணிப்பாளர் சுந்தரம்பிள்ளையிடம் ஜனாதிபதிக்கான மகஜரை பேரணி ஏற்பாட்டாளர் இளம்பிறையன் வழங்குகிறார்.

# கடல்களின் உயிர்ப்பைக் காப்போம்!

உலகில் 90 வீதமான மீனவர்கள் சிறிய - சுதேசிய முறையான மீன்பிடி முறைகளையே கையாளுகின்றனர். உலகில் பிடிபடும் மீன்களில் அரைவாசிக்கும் மேலானவை இவர்களாலேயே பிடிக்கப்படுகின்றன.

உலகச் சூழல் தினம் - யூன் 05




எங்கள் கடல்களின் உயிர்ப்பைக் காப்போம்!

சூழல் பாதுகாப்புப் பகுதி
தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்
தமிழீழ விடுதலைப்புலிகள்
தமிழீழம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
18 JUN 2004

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# இடைக்கால நிர்வாகத்தை ஏற்படுத்த ஜனாதிபதி தீர்மானித்துள்ளதான ஊடகச் செய்திகள் தவறானவை!

## அரசாங்க ஊடகப் பேச்சாளர் மறுப்பு

(கொழும்பு)

வடக்கு - கிழக்கில் இடைக்கால நிர்வாகம் ஒன்றை ஏற்படுத்துவதற்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க முடிவுசெய்திருப்பதாக சில ஊடகங்கள் விசமத்தனமான செய்திகளை வெளியிட்டிருப்பதாகவும்,

இதனை அரசாங்கம் முற்றாக நிராகரிப்பதாகவும் அமைச்சரவை முடிவுகளை வெளியிடும் கூட்டத்தில் அமைச்சரவைப் பேச்சாளரான மங்கள சமரவீர தெரிவித்தார். அவர் தொடர்ந்து கருத்து வெளியிடுகையில்,

நாட்டுமக்களுக்கு அண்மையில் ஜனாதிபதி ஆற்றிய உரை தொடர்பாகவும், தமிழ்த்தேசிய கூட்டமைப்பினரைச் சந்தித்தது தொடர்பாகவும் சில ஊடகங்கள் உண்மைக்குப் புறம்பான செய்திகளை வெளியிட்டுள்ளன.

நாடாளுமன்றச் செயற்பாடுகளுக்கு புறம்பாக தனித்த ஒரு இடைக்கால நிர்வாகசபையை உருவாக்குவதற்கான அங்கீகாரத்தை ஜனாதிபதி வழங்கியிருப்பதாகவே அந்தச் செய்தியை சில ஊடகங்கள் வெளியிட்டுள்ளன. இந்தச் செய்தியில் எவ்வித உண்மையும் இல்லை.

இனப்பிரச்சினை பேச்சுவார்த்தை மூலம் தீர்ப்பதற்கு அரசாங்கம் ஆர்வம் கொண்டிருக்கிறது. சமாதானப் பேச்சுவார்த்தைகள் கூடிய விரைவில் வெளிப்படையாக மேற்கொள்ளப்படவிருக்கிறது.

தமது அமைப்பின் மீது விடுதலைப் புலிகள் அபகீர்த்தியை ஏற்படுத்தும் வகையில் தவறான செய்திகளை அரசாங்க ஊடகங்கள் வெளியிட்டதாக நோர்வே தூதுவரிடம் புலிகள் தெரிவித்துள்ளனர்.

இதுபற்றி நான் ஆராய்ந்து வருகிறேன். விடுதலைப் புலிகள் கூறும் விடயத்தில் உண்மை இருக்குமா அல்லது தவறுகள் இருக்குமா என ஆராய்ந்து தவறுகள் இருக்குமானால் நியாயமான தீர்வு ஒன்று வழங்கப்படும்.

தகவல்களை முந்திக்கொண்டு வெளியிடுவதில் ஊடகங்களுக்குள் இருக்கும்போட்டி காரணமாக கிழக்கில் நடந்ததாக சில தவறான தகவல்களை அரச ஊடகங்களும் வழங்கியுள்ளன என்றும் அமைச்சர் மங்கள சமரவீர மேலும் தெரிவித்துள்ளார்.

# சிங்கள நூல்கள் வவுனியாவில் வெளியீடு

(வவுனியா)

தமிழீழ விடுதலைப் போராட்டம் குறித்த இரண்டு சிங்கள நூல்கள் முதன் முறையாக எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை வெளியிடப்படவுள்ளது.

விடுதலைப்புலிகளால் வெளியிடப்படும் 'தேதுன்ன' என்ற சிங்களப் பத்திரிகையில் வெளியான 'வன்னியிலிருந்து ஒரு மடல்' என்ற கடிதங்களின் தொகுப்பும்

பாலகுமாரன் எழுதிய 'மௌனித்தவரின் மனக்குமுறல்' என்ற கட்டுரைகளின் தொகுப்பின் முதலாம் பாகமுமே வெளியிடப்படவுள்ளது.

நாளை மறுதினம் வவுனியா இந்து இளைஞர் மன்றத்தில் காலை 10.00 மணிக்கு இடம்பெறும் இந்த நிகழ்வுக்கு விடுதலைப்புலிகளின் வவுனியா மாவட்ட மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் அலை தலைமை வகிப்பார்.

இந்த நிகழ்வில் புலிகளின் முக்கிய உறுப்பினர் வே.பாலகுமாரன் மற்றும் மு.திருநாவுக்கரசு ஆகியோர் உரை நிகழ்த்தவுள்ளனர்.

# திருமலை கலைஞர்களுடன் இன்று கலந்துரையாடல்

(திருமலை)

விடுதலைப்புலிகள் கலை பண்பாட்டுக் கழகம் திருகோணமலை மாவட்டக் கலைஞர்கள், இலக்கிய படைப்பாளிகள், ஊடகவியலாளர்கள் மற்றும் சமூக வளர்ச்சியை விரும்பும் நல்லெண்ணம் உடையவர்கள் அனைவரையும் இணைத்து கல்லூரி வீதியில் அமைந்துள்ள சில்வஸ்ரார் விடுதியில் கலந்துரையாடல் ஒன்றை ஒழுங்கு செய்துள்ளது.

இன்று மாலை 3.00 மணிக்கு நடைபெறவுள்ள இந்தச் சந்திப்பில் மேற்குறிப்பிட்ட அனைத்துத் தரப்பினரையும் தவறாது சமூகமளிக்கும்படி விடுதலைப்புலிகளின் கலை பண்பாட்டுக்கழகம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இந்தச் சந்திப்பில் புதிய ஆக்கச் செயற்பாடுகளுக்கான எண்ணப் பகிர்வுகளும் விடுதலையை முன்னகர்த்துவதற்கான பங்கேற்புகள் பற்றியும் பேசப்படுவதுடன் நிகழ்ச்சியின் ஒரு அம்சமாக முதற்கட்டமாக ஒரு தொகுதி இசைக்கருவிகள் வழங்குதலும் இடம்பெறவுள்ளது.

இந்தச் சந்திப்பில் வடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக்கழகப் பொறுப்பாளர் கவிஞர் புதுவை இரத்தினதுரை, திருகோணமலை அரசியற்துறைப் பொறுப்பாளர் எழிலன் ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

## பேரணிகளில் கலந்துகொண்டோருக்கு நன்றி தெரிவிப்பு

தமிழ்மக்களின் நியாயபூர்வமான பிரச்சினைகள் விடயத்தில் அரசாங்கமும், ஜனாதிபதி சந்திரிகாவும் காட்டிவரும் அசமந்தப் போக்கினை கண்டித்து யாழ்.குடாநாட்டு மக்கள் நேற்று நடத்திய பேரணியில் கலந்துகொண்ட பொதுமக்கள், ஆதரவு வழங்கிய பொது அமைப்புக்கள், சங்கங்கள், தனியார் நிறுவனங்கள், பாடசாலை மாணவர் சமூகம் உள்ளிட்ட அனைத்து தரப்புக்கும், இந்தப் பேரணிக்கு ஏற்பாடு செய்த பொது அமைப்புக்களின் ஒன்றியம் நன்றி தெரிவித்துள்ளது.

# குற்றச்செயல்களை தடுக்க மோட்டார் சைக்கிள் படையணி

## கொழும்பு நகரில் ஆரம்பம்

கொழும்பு நகரில் இடம்பெறும் குற்றச்செயல்களைத் தடுப்பதற்காக விசேட பயிற்சி பெற்ற அதிகாரிகளைக் கொண்ட பொலிஸ் மோட்டார் சைக்கிள் படையணி நேற்றுமுதல் செயற்பட ஆரம்பித்துள்ளது.

குற்றச்செயல்களைக் கட்டுப்படுத்துவதற்கான செயற்பாடுகளின் ஒரு அங்கமாகவே இப்படையணி அமைக்கப்பட்டிருப்பதாக கொழும்பு வடக்கு பிரதேசத்திற்குப் பொறுப்பான பிரதி பொலிஸ் மா அதிபர் தெரிவித்தார்.

விசேட பயிற்சி பெற்ற 30 பொலிஸ் அதிகாரிகள் இப்படைப் பிரிவில் உள்ளடக்கப்பட்டுள்ளனர். அவசர சேவைகளுக்காக மோட்டார் படையணியைச் சேர்ந்த 16 பேர் 24 மணி நேரமும் தயார் நிலையில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

நேற்று இவ்விசேட பொலிஸ் படைப்பிரிவின் கண்காட்சியும் கொழும்பு நகரில் நடைபெற்றது.

# வேலையற்றிருக்கும் பட்டதாரிகள் அனைவருக்கும் வேலைவாய்ப்பு!

## நிதியமைச்சர் தகவல்

இலங்கையின் வரலாற்றில் முதற தடவையாக - நாட்டில் வேலையற்றிருக்கும் அனைத்து வேலையற்ற பட்டதாரிகளுக்கும் வேலைவாய்ப்புப் பெற்றுக்கொடுக்கப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக நிதியமைச்சர் சரத் அமுனுகம தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்டு பேசும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

தற்போது பிரதேச செயலகங்களில் வேலைவாய்ப்புக்காக பதிவு செய்துள்ள பட்டதாரிகளுக்கு முதற்கட்டமாக பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

இதன்பின்னர் ஒவ்வொரு வேலையற்ற பட்டதாரிகளினதும் தகமைக்கேற்ப நிரந்தரப் பணிகளில் அமர்த்தப்படுவர்.

இதேவேளை, அரசாங்க ஊழியர்களின் சம்பளம் அடுத்த வரவு செலவுத் திட்டத்தில் அதிகரிக்கப்படும்.

அரச ஊழியர்களுக்கு சம்பள உயர்வு வழங்குவதற்கு தேவையான நிதியை திரட்டுகின்ற வழிவகைகள் குறித்து தற்போது ஆராயப்பட்டு வருகின்றது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# அரச எதிர்ப்புக் கண்டன...

வர்கள், வர்த்தகர்கள், வாகன சாரதிகள், பொதுமக்கள் என ஒரு இலட்சம் பேர்வரை கலந்துகொண்டனர்.

கண்டனக் கோஷங்களை எழுப்பிய வண்ணம் நகர்ந்த பேரணி யு.என்.எச்.சி.ஆர் அலுவலகத்தை அடைந்தவுடன் யு.என்.எச்.சி.ஆர் யாழ். மாவட்ட பிரதிநிதி அக்றோனிடம் வெகுஜன அமைபுக்களின் ஒன்றியத்தைச் சேர்ந்த அருந்தவகுமார் மகஜரைக் கையளித்தார்.

இதன்பின்னர் - பேரணி நகர்ந்து போர்நிறுத்த கண்காணிப்பு குழு அலுவலகத்தினை அடைந்ததும், யாழ்.மாவட்ட போர் நிறுத்த கண்காணிப்புக்குழு தலைமை பிரதிநிதியிடம் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் தலைவர் செல்வகுமார் மகஜரைக் கையளித்தார்.

இதனைத் தொடர்ந்து பேரணி நகர்ந்துசென்று சர்வதேச செஞ்சிலுவைக் குழுவின் வதிவிடப் பிரதிநிதியிடம் தேசிய எழுச்சிப் பேரவையைச் சேர்ந்த கனகலிங்கம் மகஜரைக் கையளித்தார்.

இதன்பின்னர் - தொடர்ந்தும் நகர்ந்த பேரணி, யாழ்.செயலகத்தைச் சென்றடைந்தது. அங்கு கண்டனக் கூட்டம் கண்டனப் பேரணி ஏற்பாட்டாளர் இளம்பிறையன் தலைமையில் இடம்பெற்றது.

இங்கு நாடாளுமன்ற உறுப்பினர் கனகரத்தினம் கஜேந்திரன், தமிழர் ஆசிரியர் சங்கத்தைச் சேர்ந்த பஞ்சலிங்கம், வடமாகாண கடற்தொழிலாளர் சங்கத்தைச் சேர்ந்த சூரியகுமார், யாழ்ப்பாண ஊடகவியலாளர் சங்கத் தலைவர் தவச்செல்வம், மக்கள் பணிமனையைச் சேர்ந்த நௌசர் ஆகியோர் நிகழ்த்தினர்.

தொடர்ந்து மகஜர் கையளிக்கும் நிகழ்வு இடம்பெற்றது. ஜனாதிபதிக்கான மகஜரை யாழ்.செயலக திட்டமிடல் பணிப்பாளர் சுந்தரம்பிள்ளையிடம் பேரணி ஏற்பாட்டாளர் இளம்பிறையன் கையளித்தார்.

தொடர்ந்து பிரதமருக்கும், எதிர்க்கட்சி தலைவருக்குமான மகஜர் யாழ்.செயலக உதவி அரசாங்க அதிபர் வீரபத்திரபிள்ளையிடம், தேசிய எழுச்சிப் பேரவையின் செயலாளர் சூ.சிறில் கையளித்தார்.

கண்டனப் பேரணி காரணமாக, யாழ்.குடாநாட்டு மக்களின் செயற்பாடுகள் அனைத்தும் நேற்று நண்பகல் வரை வெறிச்சோடிக்காணப்பட்டது. வாகனப் போக்குவரத்துக்கள் பெருமளவில் ஸ்தம்பிதமடைந்திருந்ததுடன், வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டிருந்தன.

இந்தக் கண்டனப் பேரணியில் சுமார் ஒரு இலட்சம் பொதுமக்கள் கலந்துகொண்டதாகத் தெரியவருகிறது. இதனால், பேரணி ஒரு குறிப்பிட்ட இடத்தைக் கடந்து செல்ல சுமார் ஒன்றேகால் மணிநேரம் சென்றதும் குறிப்பிடத்தக்கது.

கண்டனப் பேரணி முடிவுற்றதும் நேற்று பிற்பகல் 2 மணிக்குப் பின்னர் குடாநாட்டில் வழமையான பணிகள் இடம்பெற்றன.

(ப.தீ.91,46)

## கொழும்பு...

பர் இந்திர டி சில்வா கொழும்பு மாநகருக்கு உச்சப் பாதுகாப்பு வழங்கப்பட்டிருப்பதாக தெரிவித்தார்.

எவ்வாறாயினும் பொதுமக்களுக்கு ஏற்படக்கூடிய அசௌகரியம் கருதி வீதித் தடைகள் ஏற்படுத்தி சோதனை செய்யும் நடைமுறை அமுல் செய்யப்படவில்லை.

பாதுகாப்பை உறுதி செய்வதற்காக பல்வேறு மட்டத்திலான விசாரணை மற்றும் மீள்பரிசீலனை செயற்பாடுகளும் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் பொலிஸ் மா அதிபர் குறிப்பிட்டார்.

## சுவிஸில்...

இளைஞர் இங்கு வந்திருந்தார். உயிரிழந்த இளைஞரின் சடலம் வைத்திய பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

## பிரதமர்...

பகுதியில், இலங்கையின் சமாதானப் பேச்சுவார்த்தைகளின் முன்னேற்றம் குறித்து இந்திய தலைவர்களுடன் பேச்சுவார்த்தையை நடாத்துவாரென எதிர்பார்க்கப்படுகிறது.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுடன் அமைச்சர்களான சுசில் பிரேமஜயந்த, ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே, சந்திரசேன விஜயசிங்க மற்றும் பேரியல் அஷ்ரப் ஆகியோரும் செல்லவுள்ளனர்.

## யோசனைகளை ஏற்காவிடில்...

நாம் முன்வைத்தோம்.

இவற்றை நடை முறைப்படுத்தி இருந்தால் குற்றங்களையும், மோசடிகளையும் கடந்த பொதுத் தேர்தலில் இயன்றளவு குறைத்திருக்கலாம்.

இலங்கையின் அழைப்பின் பேரிலேயே ஐரோப்பிய ஒன்றியத்தின் தேர்தல் கண்காணிப்புக்குழு வருகின்றது.

எனவே நாம் கொடுக்கும் யோசனைகளை நடைமுறைப்படுத்துவது இலங்கை அரசின் பொறுப்பு. நாம் மீண்டும் கூறிக்கொள்வது எமது பொறுப்பு பொதுத் தேர்தலின் பின்பு முடிந்து விடுகிறது. இது குறித்து அறிவிக்கச் சந்தர்ப்பம் இல்லை.

எனது அனுபவத்தையே நான் தெரிவிக்கின்றேன். ஐரோப்பிய ஒன்றியத்தின் தேர்தல் கண்காணிப்பாளர்கள் மீண்டும் அனுப்பப்படமாட்டார்கள் எனத் தெரிவித்தார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 18.06.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.